T. 632.

உ

கடவுள்துணை.

# செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று

மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பதினைந்தாந் தொகுதி.

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1916—1917.

# செந்தமிழின்
# பதினைந்தாந்தொகுதியுள்ளுறை.


| | | |
|---|---|---|
| அநுதாபக்குறிப்பு:— | பத்திராதிபர். | ௨௫௩, ௫௨௨ |
| அந்தகக்கவி, வீரராகவ முதலியார்காலம்:— | ஸ்ரீமத், வே. ஜோ. தம்பிப்பிள்ளையவர்கள். M.R.A.S. | ௧௯௩ |
| அறியாமை வினை:— | ,, சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். | ௧௩௦ |
| இந்துதேசசரித்திர காலக்குறிப்புகள்:— | ,, R. S. நாராயணசாமி ஐயரவர்கள், B. A. B, L. | ௧௩௧ |
| இப்போதைய கல்விப் பயிற்சி:— | ,, K. G. வீரராகவையரவர்கள். | ௫௫௦ |
| இயற்சொல்லுந் திசைச்சொல்லும்:— | ,, S. வேங்கடராமையரவர்கள். | ௫௩௪ |
| இரசாயனமும் ஐரோப்பிய யுத்தமும்:— | ,, K. G. வீரராகவையரவர்கள். | ௧௧௫ |
| இரணியன்வதைப் பரணி:— | சு. நல்லசிவன்பிள்ளை. | ௬௧, ௮௯, ௧௪௭, ௨௦௩, ௨௫௯ |
| இருமணி (சத்தும் சதசத்தும்):— | ,, J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள். | ௫௩௯ |
| உரையாசிரியர்கள்:— | ஸ்ரீமத், ச. சபாரத்தினமுதலியாரவர்கள். | ௨௧௧ |
| "எல்லே" என்னுஞ் சொல்:— | ,, S. வேங்கடராமையரவர்கள். | ௫௩௩ |
| ஒரு ஐயம்:— | ,, R. வேங்கடாசலம்பிள்ளையவர்கள். | ௧௯௫ |
| ஒரு சந்தேகம்:— | ,, வெங்கடராமசர்மா அவர்கள். | ௨௫௨ |
| ஒரு நூதன ஆராய்ச்சி:— | ,, N. V. சுந்தரராஜையரவர்கள். B. A. L. T. | ௮௫ |
| ஒரு விடுகதை:— | ,, தமிழ்த்தொண்டன் அவர்கள். | ௨௫௧ |
| ஒரு விண்ணப்பம்:— | ,, சிவபாதமவர்கள். | ௨௫௧ |
| ஓசனை நாற்காதமே:— | ,, S. சோமசுந்தரதேசிகரவர்கள். | ௧௨௯ |

| | | |
|---|---|---|
| கடவுளும் உலகும்:— | ஸ்ரீமத், J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள். | ௨௪௩ |
| கடைச்சங்ககாலம்:— | ,, K.G. சங்கரையரவர்கள். | ௫௬௭, ௬௩௩ |
| கடைச்சங்கத்திறுதிக் காலம்:— | ,, K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள். | ௩ |
| கருவூர்ச்சிலாசாசன வாராய்ச்சி:— | பத்திராதிபர். | ௬௦௮ |
| கல்லாடமும் அதன் காலமும்:— | ஸ்ரீமத், T. V. சதாசிவப்பண்டாரத் தாரவர்கள். | ௧௦௭ |
| கொங்கதேச அரசர்கள்:— | உதவிப்பத்திராதிபர். | ௧௪௩, ௧௯௭ |
| கொங்கிற்கருவூர், வஞ்சிமாநகர் என்பதற்குச் சிலாசாசனமும் வழக்குமுண்மை: | ஸ்ரீமத், ரா. இராகவையங்காரவர்கள், சேதுசமஸ்தான வித்வான். | ௬௦௭ |
| கோப்பெருஞ்சோழன்:— | ,, சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். | ௧௮௫ |
| சங்கவாழ்த்துப்பா:— | ,, திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்கள். | ௬௬௪ |
| சப்பாத்துக்கள்ளியின் உபயோகம்:— | ,, J. Chelvaranga Raju. | ௩௩ |
| சரமகவிமாலிகை:— | ,, மின்னூாருத்தினவர்கள். | ௨௫௪ |
| சில வகுப்பார்களின் பட்டப்பெயர்களைப் பற்றிய குறிப்புகள்: | ,, G A. சுந்தரமையரவர்கள். B. A. B. L. | ௧௯௨ |
| செங்குன்றூர்:— | ,, அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள். | ௯௧௦ |
| செந்தமிழ்ச்சிறப்பு:— | ,, N. V. சுந்தரராஜையரவர்கள் B. A. L. T. | ௨௫, ௯௭ |
| சேரர்பேரூர்:— | ,, S. சோமசுந்தரபாரதியவர்கள் M. A. B. L. | ௨௬௭, ௩௩௧ |
| தக்கம், தெற்கு; தக்கநாடு, தென்னாடு:— | ,, T. S. குப்புசாமிசாஸ்திரியவர்கள். | ௧௨௮ |
| தமிழ்ச்சங்கங்களுக்கும், தமிழ்ப்புலவர்களுக்கும்:— | ,, த. வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்கள். | ௯௫௬ |
| தமிழ்நாடுகளும் பண்டித சுப்பிரமணிய சாஸ்திரியாரும்:— | ,, வே. ஜா. தம்பிப்பிள்ளையவர்கள். M. R. A. S. | ௫௨௩ |

| | | |
|---|---|---|
| தமிழ்ப்புலமைப் பரிசு:— | மாட்சிமைதங்கிய B. இராஜராஜேஸ்வர சேதுபதியவர்கள், அக்கிராசனாதிபதி மதுரைத் தமிழ்ச்சங்கம். | ஙஉக |
| திருஞானசம்பந்த சுவாமி பிள்ளைத்தமிழ்: | ஸ்ரீமத், S. சோமசுந்தரதேசிகரவர்கள். | ஙஎ |
| திருவிசலூர் சாஸநம்:— | ,, T.A. கோபிநாதராவ் அவர்கள். M.A. | களச |
| திருவைகாவூர்ச்சாஸனம்:— | ,, T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள். | உசக |
| தேசபாஷையின் வளர்ச்சிக்குற்றவழி:- | ,, ஊ. சா. வேங்கடராமையரவர்கள். | உகஅ |
| நந்தர் நீதியம்:— | ,, R. ரெங்காச்சாரியரவர்கள். | சுருரு |
| நிலப்பொறை:— | ,, T. S. முருகேசப்பிள்ளையவர்கள். | உஙங |
| பதார்த்ததீபிகை:— | ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். | அங, ருஙசு |
| பதினெண்கீழ்க்கணக்கு:— | ,, சிவபாதமவர்கள். | உஉஎ |
| பரிசோதனைத்தொடர்:— | ,, ரெ. இராமைய்ங்காரவர்கள். | ஙஉங |
| பிழைதிருத்தம்:— | பத்திராதிபர். | அஅ, கஅச |
| பிழைதிருத்தம்:— | | ஙகூச, சருஅ |
| புத்தகமதிப்புரை:— | | அசு, உருசு, ஙஉஅ, ருகூச, சுகசு |
| மக்களது உடம்பின் உயர்வும் அதன் பாதுகாப்பும்:— | ஸ்ரீமத், ஊ. சா. வேங்கடராமையரவர்கள். | களஎ |
| மங்களவாழ்த்து:— | ,, N. V. சுந்தரராஜையரவர்கள் B. A. L. T. | சுருஅ |
| ஷை | சு. நல்லசிவன்பிள்ளை. | சுசுக |
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினாறாவது வருடக்கொண்டாட்டம்:— | பத்திராதிபர். | ருகூக |
| மதுரைத்தமிழ்ச்சங்கப் பரீக்ஷைகளின் தேர்ச்சி விபரம்:— | மாட்சிமைதங்கிய மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியவர்கள். | ருOஎ |

| | | |
|---|---|---|
| மனுமுனிவர்காலத்துச்சலப்பிரளயம்:— | ஸ்ரீமத், வே. ஜோ. தம்பிப்பிள்ளையவர்கள். M. R. A. S. | உடரு |
| மாகீர்த்திநாமநிரூபணம்:— | ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்:— | க |
| முதல் இராஜராஜதேவர் துலாபாரம்:— | ,, T. A, கோபிநாதராவ் அவர்கள். M. A. | களஉ |
| Literary Notice:— | ,, T. K. நாகராஜராவ் அவர்கள். | அசு |
| வஞ்சி:— | ,, Row Bahadur. K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள். | சகூ |
| வஞ்சிமாநகராராய்ச்சி:— | பத்திராதிபர். | சூகஎ |
| வஞ்சிமாநகர்:— | ,, ரா. இராகவையங்காரவர்கள், சேதுசமஸ்தானவித்வான். | நடசஎ, நடகூரு, சருகூ |
| வானியாறு:— | ,, அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள். | சூசகூ |
| விடை:— | ,, முருகவேள். | உருக |
| வித்யாபரிபாலனசங்கம்:— | ,, ராம. ராமசாமிசெட்டியாரவர்கள். | ருசூங |


---

செந்தமிழ்ப் பதினைந்தாந்தொகுதியில் வெளிவந்த நூல்:—

(முற்றுப்பெறாதது.)


| | | |
|---|---|---|
| பழமொழி மூலமுமுரையும்:— | பத்திராதிபர். | க, சா பகுதிகள். |


---

ஓடிய "டியூச்லெண்ட்" என்ற ஜெர்மன் சப்மரீன்கப்பல் 750 டன்நிறை பொருந்திய சாயச்சரக்குகளை அமெரிக்காவில் "வானத்தைப்பார்த் திருந்த"வர்களுக்கு உதவியதைப் பத்திரிகைகளிற் படித்திருக்கிறோம். இம்மாதிரி சாயத்திற்குக் கஷ்டமுண்டாகுமென்றொருவரும் நினைக்க வில்லை. இரண்டாவது காகிதத்தை எடுத்துக்கொள்ளுவோம். இது கிடைப்பதே அருமையாய்விட்டது. இதற்குச் சான்று தபாலாபீஸிற் கொடுக்கிற ரசீதுகளும், உபயோகத்துக்கு அகப்படாத மற்ற அச்சுப் பாரங்களுமே. இன்னும் சிலகலாசாலைகளிலும் சிறுபள்ளிக்கூடங்களி லும் பரீக்ஷாகாலங்களிற் காகிதத்தின் இருபக்கங்களையும் உபயோகிக்கச் சொல்வதும் ஒருசான்றேயாகும். கடைசியாகக் காகிதவிலையேற்றத் தின்பொருட்டுச் சில பத்திரிகைகளின் விலையேற்றமும், இன்னுஞ் சிலபத்திரிகைகளின் அளவுச்சுருக்கமும் மற்றோர் சான்றாகும். போதாக்குறைக்கு இரசாயனக்கூழ் மிகுதியாய்க்கிடைக்கும் ஸ்வீடன் தேசத்தார் தங்கள் நாட்டினின்றும் மற்ற இடங்களுக்கு அதை ஏற்று மதி செய்யக்கூடாது என்று சட்டஞ் செய்துவிட்டனர். இந்தச் சண் டையின் காரணமாகவே, நமக்குச் சமீபத்திலிருக்கிற புனலூர்க் காகித சாலையில் துரைத்தன உத்தியோகஸ்தர்களும் அக்கரைகொண்டு மலி வாய்க் காகிதம்செய்ய முயற்சித்துவருகிறார்கள். இம்மாதிரியான முயற்சி இன்னும் பலஇடங்களில் நடந்துவருகின்றது.

இன்னும் சர்க்கரை அல்லது ஜீனியை எடுத்துக்கொள்வோம் இரண்டுவருஷங்களுக்குமுன் 14ரூபாவாகவிருந்தது இப்பொழுதுவிலை இரண்டரைப்பங்கு அதிகமாயிருக்கின்றது. அதாவது முப்பத்தைந்து ரூபாவாயிருக்கிறது. ஜெர்மனியர்கள் சர்க்கரைவள்ளிக்கிழங்கிலிருந்து ஜீனியை எடுக்கும் உபாயத்தைச் செவ்வைப்படுத்தித் தங்களுக்கு வேண்டியதுபோக மீதத்தை மற்றஇடங்களுக்குக் கொண்டுபோய் இலாபமுறக் குறைந்தவிலைக்கு விற்றுவந்தார்கள்? அவர்கள் சர்க்கரை நமக்குக் கிடைக்காமற்போகவே, மற்றநேசதேசங்களும் நாமும் இடர்ப் படுகின்றோம். இப்பொழுதுதான் "கிடைத்ததுகிடைத்தது" என்று அதிகவிலைக்கு விற்று எல்லாஜீனி ஆலைகளும் இலாபம் பெறுகின்றன. பலவழியிலுஞ் சீனிசெய்யும் உபாயத்தைக்கண்டுபிடிக்க அநேகர்பிரயத் தனஞ்செய்கின்றனர்.

எனவருதலானறிக. ஈண்டு உரைகாரரும் இக்கருத்தேபடவுரைத்ததுகாண்க. உவமையாலும் சேரபாண்டியரிருவர்குடையும் இவன் ஒருகுடையின்பின்னானதன்மை நன்றுணரப்படும். இருகுடையும் பின்படவோங்கிய ஒரு குடை இன்னும் ஓங்கிச் சேய்மைக்கண்ணேவிளங்கப் புகழ்வேட்கையைவிரும்பிப் பாடிவிட்டிருத்தலையல்லது நின்னகரிருத்தலையுடன்படாயென்று அவனைக்கூறியதுங்காண்க. சோழன் பாண்டியரைவென்று அப்பாற் சேரரை வென்று பின் வடநாடுசெல்வதை ஆசிரியர்கருதினாராயின் அதற்கேற்ற சொற்பெய்து அப்பொருள்விளங்கவுரைப்பர். அவ்வாறொன்றுங்கூறாது குணதிசையாளுஞ்சோழன் குணகடல்பின்னாகக் குடகடலின் திரை அச்சோழனது குதிரையின்குளம்பையலைப்ப வலமுறையாக வருதலுமுண்டாமென்று கூறுதலாலும் அவர்க்கது கருத்தன்றென்க. இதன்கண், குணதிசைபின்னாக என்றதனால் வடதிசை நோக்கி அப்போதுபுறப்படுதலைக்குறித்தல்காண்க. சிலப்பதிகாரத்தும் "வஞ்சிநீங்கி வெண்டலைப்புணரிவிளிம்புசூழ்போத" என்புழிச் சூழ்போதஎன்றலாற் சுற்றிவருதலையேகூறினாரென்று தெளிக. புறப்பாட்டிலும் குடகடலை வெண்டலைப்புணரி என்றதனையும் ஈண்டைக்குநோக்கிக்கொள்க.

அரும்பதவுரையாசிரியர் கடற்கரையே யொருகைபோத என்றார். அதற்கும் இதுவே கருத்தாகும். சேனைத்தலைவரும் தூசிப்படையும் பழையமுறைப்படி தன்னாட்டை வலஞ்சுற்றவிடுத்துத் தலைவருஞ்சேனையுஞ் சூழ்வராநிற்கையிற் றானுஞ்சென்றுகூடித் தானையொடு நீலகிரியினெடும்புறத்துத்தங்கினான் என்றுகொள்க. நீலகிரியிலதிகபாகம் சேரரைச்சேர்ந்ததாதலின் ஆண்டுத்தங்கினான். அக்காலத்து அதுவே படைசெல்வழியுடையதுபோலும். இக்காலத்தும் நீலகிரிப்பகுதியிற் சேரன்பாடி, சேரன்கோடு என்பன உளவாதல் கண்டுகொள்க.

இனிச் சேரர்படைப்பெருக்கத்தைப்பற்றிப் பதிற்றுப்பத்துள் “இறும்பூதாற்பெரிதே” என்னும் பாட்டா னன்குணரலாம். அதனுள் அவர் படைத்திரளை “வரம்பில்வெள்ளம்” என்றுகூறி அப்படை திரண்டாற் பகைவர் நாட்டெல்லையின் முற்பாடுசென்றுவிடும் என்னுங்கருத்தான் “நெடுநீரதுறைகலங்க மூழ்த்திறுத்தவியன்றானை

விருபெருங்காரியங்களையுமேற்கொண்டு பெரும்படையுடன் எழுந்த செங்குட்டுவன் தன் படையினை இடஞ்சுற்றவிட்டுச்செல்லாது தமிழ் நாட்டரசர்வழக்கப்படி வலஞ்சுற்றவிட்டு வடநாடுசெல்ல நினைந்தத னுற் புணரியின்விளிம்புசூழ்போத என்றுரெனவறிக. தமிழரசர் வட நாட்டுப்படையெழுச்சிக்கண் இங்ஙனம் வலமுறைசெல்லுதலுண் டென்பது,

"குணகடல்பின்னதாகக்குடகடல்
வெண்டலைப்புணரிநின்மான்குளம்பலைப்ப
வலமுறைவருதலுமுண்டென்றலம்வந்து
நெஞ்சநடுங்கவலம்பாயத்
துஞ்சாக்கண்ணவடபுலத்தரசே" (புறம் - ௩௧)

எனச் சோழனலங்கிள்ளியைக் கோவூர்கிழார்பாடிய புறப்பாட்டா னறியப்படும். இவ்விடத்து உரைகாரரும் "கீழ்கடல்பின்னதாக மேல் கடலினது வெளியதலையையுடையதிரை நினதுகுதிரையினதுகுளம் பையலைப்ப வலமாகமுறையேவருதலும்உண்டாமென்று சுழன்று நெஞ்சநடுங்கும்அவலம்பரப்பத் துயிலாதகண்ணையுடையவாயின வட நாட்டுள்ள அரசுகள்" எனக்கூறினர். வென்றியேவேண்டி வடநாடு புகுமிடத்துச் சோழன்வலமுறைசெல்வானுயின், வென்றியுடன் தெய்வமங்களத்துக்குக் கல்கோடலையுங்கருதிய சேரன் வலமுறை சென்றான் என்றுகூறுவதே பொருந்தியதாகும். மேற்கண்ட புறப் பாட்டிற் சோழனலங்கிள்ளி சேரபாண்டியருடைய இருகுடையும் பின்னுக ஓங்கிய ஒன்றாகிய வெண்கொற்றக்குடையையுடையனுயினு னென்று கேட்கப்படுதலா னிவன் தன்னுல் முன்னமேவெல்லப்பட்ட சேரபாண்டியரைவெல்லவேண்டி வலமுறைவருதலுண்டென்று கரு தற்காகாது. இதனை அப் புறப்பாட்டில்,

சிறப்புடைமரபிற்பொருளுமின்பமு
மறத்துவழிப்படூஉந்தோற்றம்போல
விருகுடைபின்படவோங்கியவொருகுடை
யுருகெழுமதியினிவந்துசேண்விளங்க
நல்லிசைவேட்டம்வேண்டிவெல்போர்ப்
பாசறையல்லதுநீயொல்லாயே (ஷை ஷை)

அது புலவர்மனதின்கண்ணுந் தோன்றும். அங்ஙனமே புலவர்மனதின்கட்டோன்றுவன அரசன்மனதின்கண்ணதாம். இத்தகையநட்பு உலகத்தின்கண் காணப்படுவது அருமையன்றோ!

இச்சிறந்த நட்பாளர்களான இவர்களிற் பிசிராந்தையாரை 'நும் இறைவன் யார்'என்று வினவின் அவர்களுக்குப் புலவர் தாம் பாண்டி நாட்டினராயிருந்தும், சோழநாட்டரசனையே (கோப்பெருஞ்சோழனையே) தம் தலைவனாகக்கூறுந் தன்மையினையுடையவர். அதனால் அவர் அத்துணை முதிர்ந்த அன்பு கோப்பெருஞ்சோழனிடத்துக் கொண்டவர் என்பது தெளிவாம். அன்றியும், தமதுபெயரைப் பிறர்க்குக் கூறும்பொழுது 'கோப்பெருஞ்சோழன்'என்றே கூறுவர். இவற்றாலெல்லாம் கோப்பெருஞ்சோழனிடத்துப் புலவர் மிக்க அன்புகொண்டவர் என்றுகூறுவதே பொருத்தமாம்.

இங்ஙனம் இவ்விருவருஞ் சேய்நாட்டினராய் மனத்தான் ஒற்றுமையுடையராய் விளங்கியகாலத்துக் கோப்பெருஞ்சோழன் இவ்வுலகியலைத் துறந்து வடக்கிருந்தான்.

அப்பொழுது கோப்பெருஞ்சோழன் தன்னருகிலுள்ள சான்றோரைநோக்கி "நான் இப்பொழுது வடக்கிருக்கப்போகின்றேன்; அதனையுணர்ந்து பிசிராந்தையார் என்னும் என் அருமைநண்பினர் இதுபொழுது வருவார்" என்றுகூறினான். அதுகேட்டுச் சான்றோர் "நீகூறிய அப் பிசிராந்தையார் உன்னை நேரிலறியார்; அன்றியும் அரசாட்சிச்செல்வத்தில் நீ வீற்றிருக்கும்பொழுது யாவரும் நட்பாவது உலகியல்பு, அதனைக்கொண்டு நீ அச்செல்வத்தைத்துறந்துசெல்கையிலும் அவ்விதமே இருப்பர்என்று கருதுவது மடமையன்றோ" என்றனர். "கோப்பெருஞ்சோழன்" சான்றோரே! நீங்கள்கூறுவது பொதுவான உலகியல்பேயாம். எங்கள் நட்பு அத்தன்மைத்தன்று; இது அதனினுஞ் சிறப்புடையநட்பு. அப்பிசிராந்தையார் நான் செல்வமுடையனாய்விளங்குங்காலத்துவரினும்வருவர் நான் இடருறுங்காலத்து அங்ஙனமன்றி வராமலிரார். புலவீர்,

"கவைக்கதிர்வரகினவைப்புறுவாக்கல்
தாதெருமறுகிற்போதொடுபொதுளிய
வேளைவெண்பூவெண்டயிர்கொளீஇ
ஆய்மகளட்டவம்புளிமிதவை

துக்குறுதுணைதேடுவை." என்று அவனைச் செவியறிவுறுத்திப் போரை ஒழித்தனர். இங்ஙனம் புலவர்கூறியதைக்கேட்டவுடன் கோப்பெருஞ் சோழன்மனம் போரைவிரும்பிற்றிலது. புலவர்கூறியவண்ணமே அர சன் தன் மக்களிடத்துச் சினந்தவிர்ந்து அரசியலை அவர்க்கீந்து தான் மறுமைக்குரியதைச் செய்யவேண்டிச் சிந்திப்பானுனன்.

கோப்பெருஞ்சோழன் தன்மக்களால்நேர்ந்த மானக்கேட்டைக் கருதிக்கருதிப் பெரிதும்வருந்தி, "சீசீ, இதுவோ உலகத்தியற்கை கெட்டது!" என்றுகூறி இவ்வுலகியலைத்துறப்பதற்கு மனங்கொண்டு வடக்கிருப்பானுனன்.

அக்காலத்தே பாண்டிநாட்டிற் பிசிர்என்னும் ஊரில் ஆந்தையார் என்று பெயர்பூண்ட புலவர்ஒருவர் இருந்தனர். அவரைப் பிசிராந்தை யார் என்றாவது இரும்பிசிராந்தையார் என்றாவது அழைப்பதுவழக் கம். அவர் கோப்பெருஞ்சோழனைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தனர். அவனுடையநற்குணங்கள் புலவருடைய மனதுக்கு ஒத்ததாயிருந்தன. அதனுல் அவர் அவனைப் பெரிதும் விரும்பினர். அங்ஙனமே கோப் பெருஞ்சோழனும் புலவருடைய குணவிசேடங்களைக் கேள்வியுற்று அவரிடத்துத் தன்அன்பைச் செலுத்தினன். அதுமுதல் அவ்விருவ ருக்கும் உணர்ச்சிஒத்தது.

இவ்வுணர்ச்சி ஒத்தலாகிய நட்பே மற்றைப் புணர்ச்சிநட்பு, பழகு தல்நட்பு ஆகியவற்றினும் சிறந்ததாம். அவற்றுள் புணர்ச்சி ஒருதேயத்த ராதல், பழகுதல் பலகாற்கண்டும் சொல்லாடியும் மருவுதல் ஆம்.

> "புணர்ச்சிபழகுதல்வேண்டாவுணர்ச்சிதான்
> நட்பாங்கிழமைதரும்."

என்னும் அருமைக்குறளின் விசேடவுரையிற் பரிமேலழகர் உணர்ச்சி ஒத்தலாகிய சிறந்த நட்பினுக்குக் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தை யார் இவர்களுடைய நட்பினையே விதந்துகூறினர்.

இங்ஙனம் இவ்விருவரும் உணர்ச்சி ஒத்ததனுற் பெருநட்பாளராயி னர். இன்னும் இவ்விருவரும் ஒருவரையொருவர் நேரிற்கண்டாரில்லை. புலவர் பாண்டியநாட்டிலேயேயிருந்தனர்; அரசன் சோழநாட்டினன்; ஆயினும் அரசன் யாதொரு எண்ணத்தை மனதின்கண்நினைப்பானே

உ

கடவுள் துணை.


# செந்தமிழ்

தொகுதி-௧௫.] நள ௵ கார்த்திகை ௴ [பகுதி-௧.

Vol. XV. November–December, 1916. No. 1.


## மாகீர்த்தி நாம நிரூபணம்.

மாகீர்த்தி என்பது, தொல்காப்பியம் அரங்கேற்றிய அவைக்களத்தலைவனாயிருந்த பாண்டியனது இயற்பெயர். மஹாகீர்த்தி என்னுஞ் சங்கதமொழி மாகீர்த்தி எனத் தற்பவமாயிற்று. சங்கதமொழிகள் பல தற்பவமாகி அக்காலத்திலே தமிழ்மொழியோடு கலந்து வழங்கிய முறைமை, பாண்டியர்பெயர்களாய் வழங்கும் வங்கியசேகரன், வரகுணன்முதலிய வடமொழிகளாலும், தொல்காப்பியத்திலே பிரயோகிக்கப்பட்டிருக்கும் அங்கதம், சுரிதகம், அம்போதரங்கம், ஆநந்தம்முதலிய வடமொழிகளாலும் இனிதுவிளங்கும். இம்மாகீர்த்தி அவ்வவைக்களத்தலைவனாயிருந்தான் என்பது நக்கீரர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், அடியார்க்குநல்லார், சிவஞானமுனிவர் முதலியோர் தத்தம் உரைகளிற் கூறிய வாக்கியங்களாலும், பிறர்கூற்றுக்களாலும் இனிது பெறப்படும். இம்மாகீர்த்தி என்னும்பெயர் தண்டமிழ்ச்சாத்தனார், ஆசிரியர் நல்லந்துவனார் என்பனபோலச் "சயமாகீர்த்தியன்" எனவும் வழங்கப்படும்.

"தேனார்கமழ்தொங்கன் மீனவன்கேட்ப" என்ற அமுதசாகரர் போலப் பாயிரகாரராகிய பனம்பாரனார் "நிலந்தருதிருவிற்பாண்டியன்" என்பதனாலே "மாகீர்த்தி" எனும் பெயர் உய்த்துணரவைத்தார். அதனை உரைகாரர் யாவரும் உய்த்துணர்ந்து மாகீர்த்தி என்னும் பெயருடைய பாண்டியன் என்றனர். முக்கியச்செய்திபற்றி அதனை ஒரு புனைந்துரைநாமம் எனலும் அமையும். ஆயினும் அஃதோர் இயற்பெயரன்று. இயற்பெயராயின்; உரைகாரர் கண்ணழித்துரை கூறி மாகீர்த்தி என்பதும் வருவித்துரைச்சத் துணியார். இம்மாகீர்த்திக்கு

*

வாழ்நாளெல்லை "இருபத்துநாலாயிரம்யாண்டு" எனக் கூறினும் அவ்வவைக்களத்தலைவனுய்வீற்றிருந்த யாண்டெல்லை கூறாமையின்; அது கொண்டு அவைக்களகாலம் முதலியன நிரூபித்தல் பொருந்தாது.

ஈண்டுக் கூறிய உரைகாரருள்ளே நக்கீரருரை களவியலுரை. இது பேராசிரியர், அடியார்க்குநல்லார் முதலியோர் உரைகளாலும், திருவிளையாடலாலும், பிறவற்றானும் பெறப்படும். இதனை அங்கீகரணஞ்செய்தவர் உருத்திரசர்மர். இது "திருத்தமிழ்மதுரைதன்னிற் சிவன்பொரு ணிறுக்குமாற்றால் — உருத்திரசன்மனாகி யுதித்திடுநிமல மூர்த்தி" (கந்தபு) "ஏழேழுபேர்கள்கூறவருபொரு ளதிகாரம்—ஈடாய வூமர்போல வணிகரில்—ஊடாடி யாலவாயில்விதிசெய்த" (திருப்புகழ்) என்பனவற்றாற் பெறப்படும். அடியார்க்குநல்லாருரை சிலப்பதிகாரவுரை. மற்றையோருரை தொல்காப்பியவுரை.

இவரெல்லாம் அகத்தியம், செயிற்றியம், பன்னிருபடலம் முதலிய பழையநூல்களெல்லாம் பரந்துவழங்கிய பண்டைக்காலத்திருந்த ஆப்தர்கள். அன்றியும், பண்டைநூலுரைகாரர்கள் பெயரையும், பாண்டியர்களின் பெயர்களையும், பரம்பரைகளையும், நூலுரைகளின் வரலாறுகளையும் நன்கறிதற்குரிய நல்லிசைப்புலவர்களுமாவர். சிலர் அருட்புலமையாளருமாவர். இவர் கூற்றுக்களிலேதோன்றும் ஐயுறவுகள் பலமுறையாராய்ந்து நீக்கற்பாலன. இவர் கூற்றுக்களே ஆதுனிகர்களாகிய நமக்கெல்லாம் பிரமாணங்கள், "வடவேங்கடம்" என்னும் செய்யுள் பனம்பாரனார் இயற்றியது என்பது முதலிய உண்மைகளெல்லாம் யாவரால் அறிந்தேம்? இவ்வுரைகாரருட் சிலராலன்றோ? அவைகளிலே சான்று நோக்குங்கால் வேறுபிரமாணங்கள் அரியனவாகும். ஆராய்தல் ஆவசியகம்.

இவையெல்லாம் இங்ஙனமாக ஸ்ரீமத்-சுப்பிரமணியசாஸ்திரி என்பார் மாகீர்த்தி என்பது இயற்பெயரன்று எனவும், களவியலுரைகாரர் யாவரோ ஒருவர் என்றுங் கூறுவாராய்ப் பல எழுதினர்.

இங்ஙனம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

# கடைச்சங்கத்திறுதிக்காலம்.

## முதற்பகுதி.

கடைச்சங்கத்திறுதிக்காலம் கி. பி. 2-ம்நூற்றாண்டென்று சிலரும், 5-ம்நூற்றாண்டென்று சிலரும், 8-ம்நூற்றாண்டென்று சிலரும் கூறுகின்றனர். தமிழ்ப்புலமையும் சங்கநூற்பயிற்சியும் சான்ற ஸ்ரீமத்-மு. ராகவையங்காரவர்கள் தாமெழுதிய சேரன் செங்குட்டுவன் என்னும் புத்தகத்தில் ஏனையோர்கொள்கைகளை மறுக்காமலே 5-ம்நூற்றாண்டென்பார்கொள்கையைமட்டு மாதரித்துக்கொண்டு அதற்குச் சில நியாயங்களைக்காட்டியிருக்கிறார்கள்.

அவற்றுள், முதலாவதுநியாயமாவது: கி. பி. 5-ம்நூற்றாண்டிற் கங்காப்பிரவாஹ நிடும்பிரவேசத்தாற் பாடலியழிந்ததைச் சங்கப்புலவராகிய மாமூலனார் அடியிற்கண்டவாறு பாடியிருக்கின்றாராகையாற் சங்கத்திறுதிக்காலம் 5-ம்நூற்றாண்டுக்கு முந்தியதென்றுசொல்வது இயலாதென்பது. அப்பாட்டுவருமாறு:—

> “பல்புகழ்நிறைந்தவெல்போர்நந்தர்
> சீர்மிகுபாடலிக்குழீஇக்கங்கை
> நீர்முதல்கரந்தநிதியங்கொல்லோ” என்பதாம்.

பாடலி கங்காப்பிரவாஹத்தால் அழிந்ததென்பதற்கு மாமூலனார் பாடலை ஆதாரமாகக்கொண்டு கி.பி. 5-ம்நூற்றாண்டென்று காலத்தைக் குறிப்பிடுவதற்குச் சில விஷயங்களை விவரிக்கின்றார்கள். சீனதேசத்திலிருந்து இந்தியாதேசத்துக்குவந்திருந்த பௌத்தயாத்திரிகரான பாஹியான் (Fa-Hien) என்பவர் கி. பி. 4-ம்நூற்றாண்டிற் பாடலியைக்கண்டு புகழ்ந்திருத்தலால் அக்காலத்து அது நல்லநிலைமையில் இருந்ததாகத்தெரிகிறது. மற்றொரு சீனதேசயாத்திரிகரான ஹியூந்ஸாங் (Hiuen-Tsang) என்பவர் பாடலி தன்பூர்வநிலைமையையிழந்து சிறுகிராமமாக மாறிவிட்டதைக் குறிக்கிறார். அவர்பாடலிக்கு வந்தகாலம் கி. பி. 650-ம்ஆண்டு. இவைகளுக்கிடையிற் பாடலியழிந்திருத்தல்வேண்டும்; ஆதலால் கி. பி. 5-ம்நூற்றாண்டென்றுகொள்ளுதலே பொருத்தமுடையதென்பது ஐயங்காரவர்கள் கொள்கையாயிருக்கிறது.

இவ்விடத்து ஐயங்காரவர்கள் 4ம்நூற்ருண்டென்று எழுதியிருப்பது, கி. பி. 5-ம்நூற்ருண்டுத்தொடக்கம் என்றும், கி. பி. 650-ம்ஆண்டென்றெழுதியிருப்பது கி. பி. 635 அல்லது 637-ம்ஆண்டென்றும் இருத்தல்வேண்டும்.

பாடலி, கி. பி. 6, 7-ம்நூற்ருண்டுகளில் தன்னிலைகுலைந்ததென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. கி. பி. 5-ம்நூற்ருண்டிற் கங்காப்பிரவாக நிடும்பிரவேசத்தாற் பாடலியழிந்ததென்றுசொல்வார் ஐயங்காரவர்களைத்தவிர வேறெருவரையுங்காணேம். ஐயங்காரவர்களும் மேற்கண்ட மாமூலனூர்பாடலைத்தவிர வேறெரு ஆதாரத்தையுந் தாம் சொல்வதற்குச் சார்பாய்க்காட்டவில்லை. தத்தரவர்கள் சொல்லியதை ஐயங்காரவர்கள் மேற்கோளாகக்காட்டுகிருர்கள். தத்தரவர்கள் பாடலியழிந்தது கி. பி. 5-ம்நூற்ருண்டிலென்ருவது, கங்காப்பிரவாக நிடும்பிரவேசத்தாலென்ருவது சொல்லவில்லை.

ஐயங்காரவர்கள் மேற்கோளாகக்காட்டாத ஜெனரல் கன்னிங்ஹாம், பெர்க்ளர் (General Cunningham and Berglar) என்பவர்கள் கி. பி. 8-ம்நூற்ருண்டிற் பாடலியைக் கங்கைவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டதென்றும், பழையபாடலி இப்பொழுது கங்கைநீர்த்திரள் செல்லுமிடத்து இருந்ததென்றும் முதலில் 1872-3ம்வருஷத்திற் சொன்னூர்கள். அவர்களெழுதியதிற் சிலவரிகளைக்கீழேகாட்டுகிறேன்.

*1872-3 Report p. 23-4.* "Accordingly as Pataliputra occupied the south banks of the Ganges before the change of the course of the Son, all or almost traces of the ancient city must long since have been swept away by the Ganges"

p. 24. "Modern Patna, consequently does not stand on the site of old Pataliputra but very close to it, the old city having occupied what is now the bed of the Ganges and perhaps part of the great island between Patna and Hajipur on the opposite side of the river."

p. 27. "In support of my assertion that ancient Pataliputra is now under the waters of the Ganges........"

p. 27. The vast quantities of stone which must have been employed in the construction of the palaces and other edifices could not disappear so entirely as to leave no trace."

மண்ணிற்புதைபட்டிருந்த பாடலியிருக்குமிடத்தை அறியாமற் சம்பந்தமில்லாத வேறுஇடங்களிற் பெர்க்ளர் (Berglar) வெட்டிப் பரிசோதித்ததிற் புதைபட்டநகரத்தி னடையாளங்கள் ஒன்றும் அகப்பட்வில்லை. இப்பொழுது கங்கையோடுமிடத்திற் பாடலியிருந்திருக்க வேண்டுமென்று பெர்க்ளரும் கன்னிங்ஹாமும் முடிவுசெய்தார்கள். பிறகு, 1892-ம்வருஷத்தில் வாடல்(Waddell)என்பவர் பரிசோதித்து ஜெனரல்கன்னிங்ஹாம் பெர்க்ளர் இவர்கள்கொண்ட அபிப்பிராயம் முழுதும் தவறென்றும் பாட்னுநகரத்துக்கும் பாங்கிப்பூருக்கு மிடையேசெல்லும் ரயிற் பாதைக்குத்தெற்கே குமாரஹர் என்னுங் கிராமமிருக்குமிடத்திற் பழையபாடலி யிருந்திருக்கவேண்டும் என்பதற்குப் பல ஆதாரங்களைக் கண்டுபிடித்து அவைகளைக்கொண்டு "Discovery of the exact site of Asoka's classic capital of Pataliputra" எனப்பெயரிய ஒருபுத்தகமெழுதி வெளிப்படுத்தினர். இப்பொழுது குமாரஹர் என்னுங்கிராமத்தில் வெட்டிப் பரிசோதனை நடந்துவருவதில் அசோகனரண்மனையில் நூற்றுக்காற்கூடம் ஒன்று அகப்பட்டிருக்கிறது. கன்னிங்ஹாம்பெர்க்ளர் என்பவர்கள் கொண்ட அபிப்பிராயம் முழுதும்தவறென்று தெரிகிறது. (The Journal of the Royal Asiatic Society 1915 p. 64; V. A. Smith's Early History of India 3rd Edition p. 512) ஸ்மித் என்பவர் ஆற்று வெள்ளத்தாற் பாடலியழிந்ததென்று கன்னிங்ஹாம் கொண்ட அபிப்பிராயம் பிசகென்றுஎழுதியிருக்கிறர். (Early History of India p. 122 foot-note).

கி. பி. 8-ம்நூற்ருண்டிற் கங்கைவெள்ளம் பாடலியை அடித்துக் கொண்டுபோயிருக்கவேண்டுமென்று கன்னிங்ஹாம் நினைத்தாரேதவிர 5-ம்நூற்ருண்டிலென்று நினைத்தாரல்லர். சீனதேசயாத்திரிகர் ஹியூ வென் த்ஸாங் பாடலியில் கி. பி. 637-ம்ஆண்டிற் சிலகாலந்தங்கினர். அவரப்படித் தங்கியகாலத்திற் பாடலிக்கட்டடங்கள் பலஇடிந்துபோய் விட்டன. நகர மப்பொழுது சுற்றளவில் (70 li) இருந்ததென் றெழுதியிருக்கிறர். 5 li கொண்டது ஒருமைலென்று சிலரும் 6 li கொண்டது

ஒருமைலென்று சிலரும் சொல்லுகிறார்கள். அதாவது உத்தேசம் 13 மைல் என்றேற்படும். சிலவுன்னதமான கட்டடங்களும் சிலநுட்பமான கட்டடங்களும் வேலைத்திறமையைக் காட்டக்கூடிய சிறுகட்டடங்களும் இருந்தனவற்றைப்பற்றி அவரெழுதியிருக்கிறார். தான் பார்க்குங்காலத்திலும் ஜனங்கள் ஸ்நானம்செய்துகொண்டிருந்தகுளம் அவ்விடத்திலிருந்ததைப்பற்றி எழுதியிருக்கிறார். அவரெழுதியிருப்பதை முழுவதும்படிப்பவர்கள் கங்கைவெள்ளத்தாற் பாடலியழிந்ததென்றுசொல்வதற் கிடமில்லை. வெள்ளத்தால் நகரமழிந்த வொரு அடையாளமும் அவரெழுதியிருப்பதிற் காணப்படவில்லை. கன்னிங் ஹாம் பெர்க்ளர் இவர்கள் ஹியூவென்த்ஸாங் காலத்துக்குமுந்திப் பாடலியழிந்தது கங்கைவெள்ளத்தாலென்று சொல்லமுடியாதென நினைத்து, கி. பி. 8-ம்நூற்றாண்டில் வெள்ளத்தாலழிந்ததென்று சொன்னதற்கு இதுவே நியாயமென்றுதோன்றுகிறது. ஹியூவென்த்ஸாங் ஜனங்க ளதைவிட்டுக் குடிபோய்விட்டதால் நகரமழிந்ததென்று சொல்லுகிறார். ஸ்மித்தென்பவர் கி. பி. 6-ம்நூற்றாண்டில் ஹூணர்களாற் பாடலியழிந்ததென்று சொல்லுகிறார் (The Early History of India p. 293-4). இவ்விருவர் சொல்லுங்காரணங்களு மொன்றே.

இனி மேற்கண்ட மாமூலனார்பாடலுக் கர்த்தமென்னவென்று விசாரிப்போம்.

"பல்புகழ்நிறைந்தவெல்போர்நந்தர்
சீர்மிகுபாடலிக்குழீஇக்கங்கை
நீர்முதற்கரந்தநிதியங்கொல்லோ"

என்பதுபாடல். இதற்கு, ஐயங்காரவர்கள் "இப்பாடலால் நந்தருடைய புராதன ராஜஸ்தலமாகிய பாடலீபுரத்துள் கங்காநதி பிரவேசித்து அதன்வளங்களையழித்துப்போந்தசெய்தி குறிக்கப்படுகிறது" என்று எழுதியிருக்கிறார்கள். இப்பாடலின்பொருள் இன்னதென்றாவது தன்னுடைய அபிப்பிராயத்தை இப்பாடல் எவ்வாறு ஆதரிக்கிறதென்றாவது ஐயங்காரவர்கள் சொல்லவில்லை.

பாடலி மகதராஜ்யத்தின்ராஜதானி, சோணநதி உத்தரமுகமாய்ச் சென்று கங்காநதியிற் சங்கமமாகுமிடத்திற்குச் சிறிதுதூரம் தெற்கே சோணநதியின்வடகரையிலிருந்தது. இதற்கு, குசுமபுரம், புஷ்பபுரம் என்னும் வேறுபெயர்களுமுண்டு. சைசுநாகவம்சத்தைச்சேர்ந்த

அஜாதசத்ருவென்னும் அரசனாற் புத்தரிறந்தவருஷத்திலுண்டுபண்ணப்பட்டது. அவனுடைய பேரனாகிய உதையாசுவனால் விஸ்தரிக்கப்பட்டு ராஜதானியாகச் செய்துகொள்ளப்பட்டது. அவனுள்பட அந்த வம்சத்தில் மூன்றரசர்கள் 112 வருஷம் அதைத் தலைநகராகக்கொண்டிருந்தனர். பிறகு நந்தர், மௌரியர், சுங்கர், கண்வர், ஆந்திரர், குப்தர் இவர்கள் அதை முறையே ஆண்டுவந்தனர். கி. பி. 5-ம்நூற்றாண்டிற் பாடலி குப்தர் ஆளுகையிலிருந்தது.

மாமூலனார்பாடலில் நந்தர்பாடலியென்று கண்டிருக்கிறது. கங்காப்பிரவாகத்தாற் பாடலியழிந்ததாகச்சொல்லுகிற கி.பி. 5-ம் நூற்றாண்டிற் பாடலியாண்டவர் குப்தர். குப்தர்பாடலியென்றுசொல்லாது அழிந்தகாலத்துக்கு 800 வருஷத்திற்கு முந்தி அதையாண்ட நந்தர் பாடலியென்று சொல்வதற்குக் காரணமென்ன? ஒருவேளை பாடலியை ஆதியில் ஸ்தாபித்தவர்களோவென்று பார்த்தால் அது செய்தது சைசுநாகர்; நந்தரல்லர். பாடலியாண்டவர்களில் அதிகக் கீர்த்திபெற்றவர் நந்தரோவென்றுபார்த்தா லதுவுமில்லை. மௌரியர்களும் குப்தர்களும் திக்விஜயம்செய்து தங்கள் ராஜ்யத்தை அநேகமாய்ப் பரதகண்ட முழுவதும் பரவச்செய்து கீர்த்தியோடு அரசாண்டார்கள். ஒருவேளை நீண்டகாலம் பாடலியை யாண்டவரோவென்றுபார்த்தால் அதுவுமில்லை. ஆந்திரர் முதலியவர்கள் நீண்டகாலம் பாடலியையாண்டவர்கள். நவநந்தர்களும் அதனை 100 வருஷந்தா னாண்டார்கள். அப்படியானால் "நந்தர்பாடலி" என்று இப்பாடலிற் சொல்வதற்குக்காரணமென்ன? நந்தர்காலத்தில் நடந்தவிஷயமாவது அல்லது நந்தர் சம்பந்தமுள்ள விஷயமாவது இப்பாடலிற் சொல்லப்பட்டிருத்தல்வேண்டும். நாம் அப்படி நினைப்பதற்கு ஆதாரமிருக்கிறதாவென்று விசாரிப்போம். நந்தனை விஷ்ணுபுராணமுதலியவற்றில் மகாபத்மனென்றுசொல்லப்பட்டிருக்கிறது. பாகவதத்தி லவனை மகாபத்மபதியென்றும் சொல்லியிருக்கிறது. ஸ்ரீதரருடைய வியாக்கியானத்தினாலே மகாபத்மசங்கியையுள்ள திரவியம் நந்தனுக்கிருந்ததென்று தெரிகிறது. மகாவம்சம் என்னுமிலங்கைச்சரித்திரத்திற் கடைசியாயிருந்த நந்தனைத் தனநந்தனென்று சொல்லியிருக்கிறது. வடமொழிக்கதாஸரித்ஸாகரம் என்னும் புத்தகத்திற் பின்கண்டகதை காணப்படுகிறது. வர்ஷர் என்னும் ரிஷியிடத்தில் வாருசி, பாணினி, வியாடி, இந்திரதத்தன் முதலியோர் வியாகர

ணம் வாசித்ததாகவும், அவரில் வியாடி, இந்திரதத்தன் இவர்கள் படித்து முடிந்தபிறகு வர்ஷரிடத்திற்சென்று தாங்கள் என்ன தக்ஷிணை சமர்ப்பிக்கவேண்டுமென்று கேட்டபொழுது வர்ஷர் கோடிபொன் வேண்டுமென்று சொன்னதாகவும், சிஷ்யர்கள்கூடிப்பேசிக்கொண்டதில் நந்தனிடத்தில்தான் 99 கோடி பொன்னிருக்கிறது; அவனிடத்திற் போய் யாசிக்கவேண்டுமென்று முடிவுசெய்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

कथासरित्सागरम्

ततो व्याडीन्द्रदत्ताभ्यां विज्ञप्तो दक्षिणां प्रति ।
[illegible] वर्षोऽपि स्वर्णकोटिमशेषवित् ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
नवाधिकाया नवतेः कोटीनामधिपोऽस्ति सः ॥

இந்தக்கதை வடநாட்டிற் பூர்வகாலமுதற்கொண்டு வழங்கிவருகிறது. இதல்லாமல் மேற்கண்டபாடலைப்பாடிய மாமூலனாரே பின்கண்ட பாடலையும் பாடியிருக்கிறார்.

"நாம்படர்கூருமருந்துயர்கேட்பின்
நந்தன்வெறுக்கையெய்தினுமற்றவட்
டங்கலர்வாழிதோழி" ... ... அகம் 251.

இது பொருண்மேற்சென்றகாதலன் நாம் படுந்துயரத்தைக்கேட்டால் நந்தன் நிதியமளவு சென்றவிடத்துக் கிடைப்பினுந் தங்கமாட்டான் என்று தலைவிக்குத் தோழிசொல்லியது. இதனால் தமிழ்நாட்டிலுள்ள பெண்மக்களுள்ளும் நந்தன் நிதியங்குழவியகதைவழங்கிவந்ததென்று தெரிகிறது. மேற்காட்டிய மேற்கோள்களால் இக்கதை யிலங்கைத் தீவுமுதல் இமயமலைவரை வெகுகாலமாக வழங்கிவந்ததென்றேற்படும்.

மேலும் நந்தர்களிடத்தில் திரவியந்திரண்டிருந்தது ஐந்து ஸ்தூபிகளின்கீழ்ப் பாடலியிற் புதைத்துவைக்கப்பட்டிருந்தது என்னும் வதந்தி முன்காலத்தி லுலாவியதென்றும், அடுத்ததேசத்தரசனொருவன்

அதனை நம்பிப் படையுடன் ஸ்தூபிகளின்கீழ் வெட்டிப் பரிசோதித்துப் பார்க்கவந்தானென்றும், மற்றவர்களும் அப்படிச் செய்தனரென்றும் சீனதேசத்து யாத்திரிகர் ஹியூவென்த்ஸாங் எழுதியிருப்பதா லறிகிறோம். அது வருமாறு:—

H. T. XI "He (Asoka) erected with exceptional grandeur five other stupas remarkable for their miraculous exhibition with a view to indicate the fivefold spiritual body of Thathagatha. Some desciples of little faith talking together argued thus "In old times, Nandaraja built these five stupas as treasure places for his wealth." In consequence of this gossip in after time, a King of insincere faith, excited by covetouoness came with his followers to dig (the stupas). It is said moreover (*i. e.* in the Indian records) with respect to the gossip of the priests, there has been some doubt expressed but we believe it to be true according to the old tradition."

வாடல் (Waddell) என்பவர் எழுதியிருக்கும்புத்தகத்திற் பின் கண்டவரிகள் காணப்படுகின்றன.

"Nandaraja is incidentally mentioned by Hiuen-Tsang as a former King of Magadha and possessed of vast wealth. And Hindu and Ceylon traditions speak of the 'Nine Nandas' the last of whom Dhana Nanda or the 'Rich Nanda' was deposed by Chandragupta the grandfather of Asoka who then usurped Nanda's Kingdom"—"Discovery of the Exact Site of Asoka's Classic Capital of Pataliputra—p. 11."

வாடல் என்பவர் 1892-ம்வருஷத்தில், தான் பழையபாடலிக்குப் போயிருந்தகாலத்தும், ஜனங்கள் நந்தர்திரவியம் அகப்படுமென்று ஸ்தூபிகளிருந்தவிடத்தில் வெட்டிப்பரிசோதிப்பதைப் பின்கண்டவாறு சொல்லுகின்றனர்.

"This enormous mound is still being fitfully dug into as was noted in Hiuen-Tsang's account and for the same

alleged reason viz search for the treasure of the ancient Raja." "Do. p. 16."

மேற்கண்டவற்றால் நந்தர் பாடலியில் நிதியந்தொகுத்துவைத்தனரென்றும், அந்நிதி மண்ணிற் புதைபட்டிருக்கிறதென்றும் ஒருகதை பூர்வகாலந்தொட்டுவழங்கிவருவது விசதமாகும்.

மாமூலனார் ஒருபாடலிற் பாடலிக்குழீஇயநிதியமென்றும், மற்றொருபாடலில் நந்தர்வெறுக்கையென்றுங் கூறியிருப்பது ஒன்றையே என்பது தெற்றெனவிளங்கும். கி. மு. 4-ம்நூற்றாண்டிற் பாடலியிற் குழீஇயநிதியம் கி. பி. 5-ம்நூற்றாண்டிற் கரந்ததென்பது ஒருசிறிதும் பொருந்தாது. நிதியம் புதைபட்டிருந்ததென்றாற் கங்கைவெள்ளத்தால் அதற் கழிவுநேரிட்டதென்றுசொல்வதற் கிடமில்லை.

மாமூலனார் கங்கைநீர் ஓரங்குலமும் புடைபெயர்ந்ததென்று சொல்லாது புடைபெயர்ச்சியை நிதியத்துக்குக் கற்பித்திருக்கின்றனர். நிதியங் கங்கைநீரிருந்தவிடத்திற்குச் சென்றது; கங்கைநீர் நிதியமிருந்தவிடத்திற்குவரவில்லையென்றேற்படும். "கங்கைநீர்முதற்கரந்த" என்பதற்குப்பொருள் கங்கைநீர்முதலாகப் பலவிடங்களிலுங்கரந்தநிதியமென்பதே. சாணக்கியன்சகாயத்தாற் சந்திரகுப்தன் நந்தரைவென்று பாடலியிற் பிரவேசிக்க எத்தனிக்குமுன்னர் விரோதியான சந்திரகுப்தன் தங்களுடைய நிதியத்தை அடையக்கூடாதென்னும் எண்ணத்துடன் நந்தனும் அவனைச்சேர்ந்தவர்களும் தங்கள் நிதியத்தைக் கங்கைநீரிலும் மற்றவிடங்களிலும் ஒளித்துவைத்தவிஷயத்தை இப்பாடல் குறிப்பதாக நினைப்பதற்கிடமிருக்கிறது. பிரவாகத்தைக் குறிப்பதற்குப் பாடலிற் பதமேயில்லை. அழிந்தவென்னாது 'கரந்த'வென்று மாமூலனார் சொல்லியிருப்பது அவரது ஆழ்ந்தகருத்தைக் காட்டுகின்றது. விரோதிகள் கண்ணிற் புலப்படாமல் ஒளிக்கப்பட்டதென்பதற்கும் அழிக்கப்பட்டதென்பதற்கும் பேத மதிகம். கங்கைநீர் முதலென்றது பலவிடங்களிலும் நிதியமொளிந்ததைக்காட்டுகிறது; இதனால் வெள்ளத்தால் நிதியமாவது பாடலியாவது அழியவில்லையென்பது தெளிவு. அப்படி அழிந்திருந்தாற்பலவிடங்களில் நிதியங்கரந்ததென்றுசொல்வதுபொருந்தாது. ஐயங்காரவர்கள்கருத்துக்குப் பாடல் சிறிது மிடங்கொடுக்காதென்பது இதனாற்புலப்படும்.

ஐயங்காரவர்கள் முதல்நியாயத்திற் குறிப்பிடுகிறபடி கி. பி. 5-ம் நூற்றூண்டிற் பாடலி கங்கைவெள்ளத்தால் அழிந்ததென்றுவது, மாமூலனூர்பாடலுக்கு அவர்கள்கொண்டபொருள் சரியென்றுவது கொள்வதற்கிடமில்லை.

இரண்டாவதுநியாயம்—மதுரையில் கி. பி. 470-ம் வருஷத்தில் வச்சிரநந்தியென்பவர் ஒரு ஜைனத்திராவிடசங்கம் கூட்டினூர். அச் சங்கத்தின் நோக்கம் குலைந்தகடைச்சங்கத்தைப் புனருத்தாரணஞ் செய்வதேயாயின், குலைந்தசங்கம், ஜைனசங்கத்துக்குச் சிறிது முற் பட்டதாதல்வேண்டும். அதாவது கி. பி. 5-ம்நூற்றூண்டின் முற்பகுதி யல்லது 4-ம்நூற்றூண்டாகுமென்பது.

மேற்கண்ட நியாயத்தில் நாம் முதலிற் கவனிக்கவேண்டியது ஐயங்காரவர்கள் சொல்லுகிறபடி கி. பி. 470-ம்வருஷத்தில் மதுரையில் ஜைனசங்கங்கூடியதற்கு என்ன சாக்ஷியமிருக்கிறதென்பது. ஐயங்கா ரவர்கள் திகம்பரதரிசனமென்னும் ஜைனநூலில் அவ்வாறு சொல்லப் பட்டிருப்பது ஒன்றையே ஆதாரமாகக்காட்டுகிறூர்கள். மேற்கண்ட ஜைனநூல் இப்பொழுது அச்சில் வெளிவந்தபுத்தகங்களில் ஒன்றுகக் காணப்படவில்லை. சைவவைணவர்களிடத்திலுள்ள புத்தகங்களில் ஒன்றுகத்தெரியவுமில்லை. இந்நூல் யாரால் எக்காலத்துச்செய்யப் பட்டது? பிரமாணநூலா? அன்று? என்பதைக்கண்டுபிடிப்பதற்கு வழியைக்காணேம். மேற்கோளாக அந்நூலைச்சொல்லும் ஐயங்கா ரவர்கள் மேற்கண்டசங்கைகள் எழாமலிருக்கும்வண்ணம் எழுதவும், மேற்படி ஜைனநூலில் என்னசொல்லப்பட்டிருக்கிறதென்பதை அறிந்து கொள்ளும்படி அதிலுள்ள பாடல்களோ வாசகமோ அவற்றை மேற் கோளாகக் காட்டவும் கடமைப்பட்டவர்களென்று தோன்றுகிறது. அவர்க ளந்தநூலை "ஒருசிறுசான்று" என்று சொல்லிவிடுத்தார்கள். இவ்வாறெழுதுவது அதைப் படிப்பவர்களுக்கெழும் ஐயங்களை நீக்க வலியுடையதென்று நினைப்பதற்கு இடமில்லை. சங்ககாலத்தைப்பற்றி யையுறாது சமாதானம்பெற்றிருப்பதாய் நினைத்திருக்கும் சிலர் கொள் கையைத்தழுவி ஐயங்காரவர்கள் இவ்வாறெழுதுவது பொருத்த முடையதாகக் காணப்படவில்லை.

இரண்டாவது, அச்சங்கத்தின்நோக்கம் குலைந்த கடைச்சங்கத் தைப் புனருத்தாரணஞ்செய்வதேயாமென்று ஐயங்காரவர்கள் எழுதி

யுள்ளார்கள். ஜைனசங்கம் கூடியிருக்கும்பக்ஷத்திற் குலைந்தசங்கத்தைப் புனருத்தாரணம் செய்யத்தான் அது கூடிற்றென்று சொல்ல இடமில்லை. ஏனென்றால், குலைந்தசங்கத்தின் அங்கத்தினராகவிருந்த புலவர்கள் பௌத்தர், ஜைனர், பிராமணர், சூத்திரரெனப்பலரும் அவர்கள் மதவேற்றுமை சாதிவேற்றுமைகளைக்கவனியாது தமிழபிவிர்த்தியொன்றையேகருதிப் பாண்டியனவைக்களத்துக்கூடியவராவர். ஐயங்காரவர்கள் குறிப்பிடும் ஜைனசங்கத்தின் அங்கத்தினர்கள் ஜைனர்கள் மட்டுமென்று அவர்களெழுதியிருப்பதாற் காணப்படுகிறது. ஜைனர்கள் சங்கங்கூடியிருந்தால் அவர்களுடைய மதத்தைப்பரவச்செய்வதற்கும், அவர்களுடைய வழக்கவொழுக்கங்களைச் சீர்திருத்துவதற்கும், அவைகளுக்குவேண்டிய நூல்களையியற்றுவதற்கும் கூடியதாகக் கொள்ளலாமேயன்றிக் குலைந்தகடைச்சங்கத்தைப் புனருத்தாரணஞ் செய்வது அவர்கள் நோக்கமென்று நினைப்பதற்குச் சிறிது மிடமில்லை.

மூன்றாவது, குலைந்தசங்கத்தைப் புனருத்தாரணஞ்செய்வது ஜைனசங்கத்தின் நோக்கமாயின் அக்குலைந்தசங்கம் ஜைனசங்கத்துக்குச் சிறிது முற்பட்டதாதல்வேண்டுமென ஐயங்காரவர்கள் கூறினார்கள். சிறிதுமுற்பட்டதாதல்வேண்டுமென்பதற்கு யாதொருகாரணமும் காட்டவில்லை. தமிழ்க்கிலக்காய்வீற்றிருந்த ஸ்ரீமான் பாண்டித்துரையவர்கள், ஐயங்காரவர்கள்சகாயத்தையுங்கொண்டு இப்பொழுது மதுரையிலிருக்கும் சங்கத்தை ஸ்தாபித்தது குலைந்தசங்கத்தைப் புனருத்தாரணம் செய்யவல்லவா? குலைந்தசங்கத்துக்கு எத்தனை நூற்றாண்டுகள்சென்று இது ஸ்தாபிக்கப்பட்டது. சிறிது முற்பட்டதாதல்வேண்டுமென்று ஐயங்காரவர்கள்சொல்வது எவ்வாறுபொருந்தும். நமது கொள்கையை ஸ்தாபிப்பதற்காகவேண்டியவாறு காலங்களை நீட்டவுங் குறுக்கவும் செய்யலாமா?

மூன்றாவதுநியாயம்—சமுத்திரகுப்தனென்னும் குப்தவம்சசக்கரவர்த்தியினது தென்னாட்டுப்படையெழுச்சியில் ஜயிக்கப்பட்டவேந்தருள்ளே கேரளதேசத்து மாந்தராஜாவொருவன்; மாந்தராஜாவென்பவன் சங்கநூல்களிற் கூறப்பட்ட மாந்தரஞ்சேரல்; செங்குட்டுவன் மாந்தரஞ்சேரலுக்குக் காலத்திற்சிறிதுபிற்பட்டவன்; மாந்தரஞ்சேரலைப்பாடிய பரணரே செங்குட்டுவனையும் பாடியிருக்கிறார்; சமுத்திரகுப்தனது தென்னாட்டுப் படையெழுச்சிநிகழ்ந்தது, கி. பி. 4-ம்நூற்

றுண்டின் முற்பகுதியில்; ஆதலால் மாந்தரஞ்சேரலிருந்தகாலம் கி. பி. 4-ம் நூற்றுண்டின் பிற்பகுதியென்றும் செங்குட்டுவன்காலம் கி. பி. 5-ம் நூற்றுண்டின் முற்பகுதியென்றுங்கொள்ளுதல் தகுதியுடைத் தென்பதே. இதற்காதாரமாக டாக்டர் பிளீட் (Dr. Fleet) என்பவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற குப்தசிலாசாசனத்தை மேற்கோளாகக் காட்டுகிருர்கள்.

மேற்கண்டசாசனத்திற் சமுத்திரகுப்தனுல் அவன் தென்னுட்டுப் படையெழுச்சியில் ஜயிக்கப்பட்ட அரசர்களுடைய பெயர்களெல்லாம் பின்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு:—

𑌕𑍌𑌸𑌲𑌕𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌹𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑌕 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌰𑌾𑌜 𑌕𑍌𑌰𑌾𑌳𑌕𑌮𑌣𑍍𑌟𑌰𑌾𑌜 𑌪𑍈𑌷𑍍𑌟𑌪𑍁𑌰𑌕𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌗𑌿𑌰𑌿𑌕𑍌𑌟𑍍𑌟𑍂𑌰𑌕𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌦𑌤𑍍𑌤𑍈𑌰𑌣𑍍𑌡𑌪𑌲𑍍𑌲𑌕𑌦𑌮𑌨 𑌕𑌾𑌞𑍍𑌚𑍇𑌯𑌕𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌗𑍋𑌪𑌾 𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌕𑌨𑍀𑌲𑌰𑌾𑌜 𑌵𑍈𑌙𑍍𑌗𑍇𑌯𑌕𑌹𑌸𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌮 𑌪𑌾𑌲𑌕𑍍𑌕𑌕𑍋𑌗𑍍𑌰𑌸𑍇𑌨 𑌦𑍈𑌵𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌕𑌕𑍁𑌬𑍇𑌰 𑌕𑍌𑌸𑍍𑌥𑌲𑌪𑍁𑌰𑌕 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 என்பன இச்சாசனத்தால், கோசலதேசத்து மகேந்திரன், மகாகாந்தாரத்து வியாக்கிரராஜா, கௌராளநாட்டு மண்டராஜா, பிஷ்டபுரத்து மகேந்திரன், மலைக்கோட்டூர் ஸ்வாமிதத்தன், ஏரண்டபள்ளிநாட்டுத் தமனன், காஞ்சி விஷ்ணுகோபன், அவமுகதத்து நீலராஜன், வேங்கைநாட்டு ஹஸ்திவர்மன், பாலக்கத்து உக்கிரசேனன், தேவராஷ்ட்ரத்துக் குபேரன், கௌஸ்தலபுரத்து தனஞ்சயன், எனப் பன்னிருவர் சமுத்திரகுப்தனுல் தென்னுட்டுப்படையெழுச்சியில் ஜயிக்கப்பட்டு அவன் கையிலகப்பட்டுவிடப்பட்டுள்ளவர்கள் என அறியலாம். சிலாசாஸனவாசகத்தைப் பதச்சேதம் பண்ணுவதில் மாறுபட்டு 11 அரசர்கள் என்று கூறுவாரும் பலருளர். மேற்காட்டியவரசர்களில் யாவரினுந் தெற்கேயுள்ளவன் காஞ்சிவிஷ்ணுகோபன் என்றும், மற்றவர் நாடுகளெல்லாம் காஞ்சிக்குவடக்கேயுள்ளனவென்றும் பூர்வசரித்திரவாராய்ச்சியுடையார் சொல்லுகிருர்கள். முதவிற்கண்ட கோசலதேசமென்பது தக்ஷிணகோசலம்; மகாநதிக்கும் வடக்கேயுள்ளது. இரண்டாவதாய்ச் சொல்லப்பட்டிருக்கிற மகாகாந்தாரம் என்பது பெரியகாடு என்று பொருள்படும்; அந்நாடு மகாநதியையடுத்துத் தெற்கேயுள்ளதென்று பூர்வசரித்திரவாராய்ச்சியுடையார் சொல்லுகிருர்கள். மூன்ருவதாயுள்ள கௌராளகமண்டராஜாவென்னுந்தொடர்தான் இப்பொழுது கவனிக்கப்படவேண்டியது.

அதற்கு ஐயங்காரவர்கள் கேரளதேசத்து மாந்தாஞ்சேரலெனப் பொருள்கொள்கின்றார்கள். மற்றவர்கள் கொல்லேருஎன்னும் ஏரிக்கரையையடுத்துள்ளநாட்டையும் அதனரசனையுங் குறிக்குமெனச் சொல்லுகிறார்கள். கொல்லேருவென்பது கோதாவரிநதி, கிருஷ்ணாநதி இவைகளுக்கிடையிலுள்ள வொரு பெரிய நன்னீரேரி.

சமுத்திரகுப்தசக்கரவர்த்தி, தன்னுடையதிக்விஜயங்கள் முடிந்தபின்னர்த் தன்னுடசென்று தகுந்த பண்டிதரொருவரைக்கொண்டு தன் விஜயங்களைக்கண்டு சாஸனந் தயார்செய்து மௌரியசக்கரவர்த்தியாகிய அசோகனால் நாட்டப்பட்டிருந்த அழகிய சிலாஸ்தம்பத்தில் அதை வரைவித்தனன். அந்தச் சிலாஸ்தம்பம் இப்பொழுது பிரயாகையிலிருக்கிறது; அந்தச் சிலாசாஸனத்தை வெளிப்படுத்திய டாக்டர்பிளீட் அதிலுள்ள "கௌராளக" என்னும் பதம் பிசகாக அவ்வாறு வரையப்பட்டிருக்கிறதென்றும், அது "கைராளக" என்றிருக்கவேண்டியதென்றுங்கொண்டு,"கைராளக" என்னும் ஸப்தம் கேரளதேசத்தைக்குறிக்குமென்றுஞ்சொன்னார். மண்டராஜாவென்னும் மொழியைப்பற்றி அவரொன்றுஞ் சொல்லவில்லை. பிறகு டாக்டர் கீல்ஹார்ன்(Dr. Keilhorn) என்பவர் இதற்கு அர்த்தம்செய்யும்படி கேரிட்டபோது டாக்டர் பிளீட் "கைராளக" என்ற பதமிருக்கவேண்டுமென்று கொண்டதற்குமாறாய்ப் பதம்"கௌராளக"என்றிருப்பதே சரியென்றும், கொல்லேரு என்னும் ஏரிக்கரையிலுள்ளநாட்டை அது குறிக்குமென்றும் சொன்னார். அதற்குள்ள நியாயங்களை விஸ்தாரமாயெழுதியிருக்கிறார். (Ep. Ind. vol. VI p. 3) 'கௌநாலக" "கௌராளக" என்னுமிரண்டு பதங்களுக்கும் அக்ஷரபேதம் ஸ்வல்பமிருந்தாலும் அர்த்தபேதஞ்சிறிதுமில்லையென்பது டாக்டர் கீல்ஹார்னது கொள்கை; டாக்டர் பிளீட் பிறகு அவரை 1898-ம்வருஷத்திற் சந்தித்தபோது அவர்களிருவரும் மேற்கண்டசாஸனத்தினர்த்தத்தைப்பற்றிப்பேசி டாக்டர் கீல்ஹார்ன் அதற்குச்செய்த அர்த்தமே சரியென்று இருவர்களும் முடிவுசெய்தார்களென்று ஸ்மித்தென்பவர் எழுதியிருப்பதால் தெரிகிறது (The Early History of India p. 284 and foot-note 2). இதனால் டாக்டர் ப்ளீட் "கைராளக" என்று முதலிற்செய்த திருத்தம் பிசகென்றும் கேரளதேசத்துக்கும் "கௌராளக" என்னும்பதத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும் ஏற்படுகிறது. (See Ind. Ant Vol. XIV

p. 57. Dr. Hultzsh Ind. Ant Vol. IV p. 37. S. I. Inscriptions Vol. II p. 308) டாக்டர் கீல்ஹார்ன், டாக்டர் ஹுல்ஷ் இவர்கள் இதைப்பற்றி விரிவாக எழுதியதை இவ்விடத்தெழுதும்பக்ஷத்தில் விரியுமென்றஞ்சி அவர்களெழுதியிருக்கும் இடங்களைக்குறிப்பித்து நிறுத்திவிட்டேன். மேற்கண்ட டாக்டர்கள்பலரால் அங்கீகரிக்கப்பட்டவாதத்தையே இந்துதேச பூர்வசரித்திரபுத்தகங்களெழுதிய ஸ்மித்தென்பவரும் புரொபெசர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும் (Professor S. Krishnaswami Ayangar) மற்றவர்களும் ஒப்புக்கொண்டிருப்பதாய்த்தெரிகிறது. மேலேகண்ட இருவரும் தாங்களெழுதிய புத்தகங்களிற் சமுத்திரகுப்தசக்கரவர்த்தி காஞ்சிவரையில் தென்றிசையில் வந்தானென்றும், அதற்குத்தெற்கே போகாமல் திரும்பி மேல்நாட்டுவழியாய்ச்சென்று தன்னாடுபோய்ச்சேர்ந்தானென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

" The invader, marching due south from the eapital, through Chutia Nagpur, directed his first attack against the kingdom of South Kosala in the valley of the Mahanadi, and overthrew its king, Mahendra. Passing on, he subdued all the chiefs of the forest countries, which still retain their ancient wildness, and constitute the tributary states of Orissa and the more backward parts of Central Provinces. The principal of those chiefs, who bore the appropriate name of Vyaghra Raja, or the Tiger King, is not otherwise known to history. At this stage of the campaign, the main difficulties must have been those of transport and supply, for the ill-armed forest tribes could not have offered serious military resistance to a well-equipped army".

"Still advancing southwards, by the East Coast road, Samudragupta vanquished the chieftain who held Pishtapura, the ancient capital of Kalinga, now Pithapuram in the Godavari district, as well as the hill-forts of Mahendragiri and Kottura in Ganjam, King Mantaraja, whose territory lay on the banks of the Kolleru (Colair) lake; the

neighbouring king of Vengi between the Krishna and Godavari rivers, presumably a Pallava; and Vishnugopa, the king of Kanchi or Conjeeveram, to the south-west of Madras, almost certainly a Pallava. Then turning westwards, he subjugated a chieftain, named Ugrasena, king of Palakka, a place perhaps situated in the Nellore District".

"He returned homewards through the western parts of the Deccan, subduing on his way the Kingdom of Devarashtra,, or the modern Maharatta country and Erandapalla, or Khandesh. V. A. Smith's Early history of India pages 283 and 284".

"This done, he started on a career of conquest to the south. Starting from Patna, he passed rapidly through the Mahanadi valley down the east coast, coming up to Kanchi in the south where the Pallavas had already made themselves secure. Taking a turn to the north-west he passed through the Maharashtra country and Khandesh and entered his territory again. From the eleven Kingdoms he passed through, he exacted allegiance but otherwise left them antonomous."

"Having achieved so much, he got his exploits set in the best Sanskrit Verse and inscribed it upon an Asoka Pillar now at Allahabad". Ancient India by S. Krishnaswami Ayangar, M. A., pages 19 and 20.

இப்படியிருக்க, ஐயங்காரவர்கள் சிலாசாஸனத்தில் "கேரள தேசத்து" என்றிருப்பதாய்க்கொண்டு எழுதியிருப்பது ஆதரவாகமாட்டாது. அன்றியும், அவர்கள்மூலத்தில் "கௌராளக" என்றிருக்கிறது; அதற்குத்தான் "கேரளதேசத்து" என்று அர்த்தஞ்செய்திருக்கிறேனென்று சொல்லாது மூலத்திலேயே "கேரளதேசத்து" என்று இருக்கிறதாக வெழுதியிருக்கிறார்கள். அப்படியில்லையென்பது மேற்கண்டவற்றால் நன்குவிளங்கும்.

இதுவரையில் "கௌராளகமண்டராஜா" என்னுந்தொடர்மொழியில் "கௌராளக" என்னுமொருமொழியைப்பற்றிய ஆராய்ச்சியைச் செய்தோம். எஞ்சிய "மண்டராஜா" என்னும் மொழியைப்பற்றிய ஆராய்ச்சியை யினிச்செய்வோம். இம்மொழியைப்பற்றி டாக்டர் பிளீட் ஒன்றும் சொல்லவில்லையென்று ஏற்கனவே சொன்னேன். ஐயங்காரவர்கள் சிலாஸ்தம்பத்தில் வரையப்பட்டிருக்கிற சாஸனத்தில் "மாந்தராஜா" வென்றிருப்பது மாந்தரஞ்சேரலென்று தமக்குத் தோற்றுவதாகச் சொல்லிவிடுத்தார்கள். அவர்கள் சொல்லுகிறபடி சாஸனமூலத்தில் "மாந்தராஜா"வென்றில்லையென்றும் "மண்டராஜா" வென்றிருக்கிறதென்றும் மேலெழுதியிருப்பவற்றால் விளங்கும்.

ஐயங்காரவர்கள் மாந்தரஞ்சேரல் என்றபெயரைச் சேரன் ஒருவனுக்குக் கூறியிருப்பதாய்ச்சொல்லிச் சிலப்பதிகாரம் XXIII 84ஐ மேற்கோளாகக்காட்டினார்கள். தமிழ்க்குப் பேரிலக்காய்விளங்கும் புலவர்பெருமானாகிய சாமிநாதையரவர்கள் பதிப்பித்திருக்குஞ் சிலப்பதிகாரத்திற் பின்கண்டவாறு காணப்படுகின்றது.

"காவல்வெண்குடை
விளைந்துமுதிர்கொற்றத்துவிறலோன்வாழி
கடற்கடம்பெறிந்தகாவலன்வாழி
விடர்ச்சிலைபொறித்தவேந்தன்வாழி
பூந்தண்பொருநைப்பொறையன்வாழி
மாந்தரஞ்சொன்மன்னவன்வாழ்கென"

சிலப்பதிகாரம் XXIII 79—84.

ஐயங்காரவர்கள் சொல்லுகிறபடி 84-வது வரியில் மாந்தரஞ்சேரலென்பதைக்காணேம். ஆனால் கையெழுத்துப்பிரதிகளில் மாந்தரஞ் சேரன் மன்னவன் என்றுபடிக்கவு மிடங்கொடுக்கலாம். ஆயினும், மேற்கண்டவரிகள் சேரனிடத்துப் பரிசில்பெறச்சென்ற பராசரனது மொழிகள். பின்கண்டவரிகளால் அவன் இமயவரம்பன்றம்பி பல்யானைச்செல்கெழுகுட்டுவனிடம் சென்றானென்று தெரிகிறது.

"வலவைப்பார்ப்பான்பராசரனென்போன்
குலவுவேற்சேரன்கொடைத்திறங்கேட்டு
வண்டமிழ்மறையோற்குவானுறைகொடுத்த
திண்டிறல்நெடுவேற்சேரலற்காண்கென" ஷ XXIII 61—64

என்பது தான் நோக்கிச்சென்ற சேரலனைவிட்டு வேறொருவரிடத்திலவன்போகும்படி நேரிட்டதாகச் சிலப்பதிகாரத்திற் காணப்படவில்லை.

பராசரனது மொழிகளெல்லாம் சேரர் புகழ்ப்பெயர்களைக் காட்டுகின்றன. சிறப்புப்பெயர் அவன் சொல்லியிருந்தாற் பல்யானைச்செல்கெழு குட்டுவன்பெயரைச் சொல்லியிருக்கவேண்டும். மாந்தரஞ்சேரலிடத்திற் பராசரன் கொடைபெற்றிருந்தால் அவன் பல்யானைச்செல்கெழு குட்டுவனிடத்திற் சென்றானென்று இளங்கோவடிகள் சொல்லியிருக்கமாட்டார். "மாந்தரஞ்சொன்மன்னவன்" என்பது ஜனங்களது அழகிய புகழ்ச்சொல்லைப்பெற்றவரசன் எனப் பொருள்படுமாதலால் மாந்தரஞ்சேரலென்று படிப்பது பொருந்துவதன்று. மேலும் பரணரும் மற்றச் சங்கப்புலவர்களும் சமகாலத்தவர்களைப்பற்றிமட்டுந்தான் பாடுகிறதென்றுண்டா? ஒரு அரசனிருந்தகாலம்தெரியாவிட்டால் நமக்கு வேண்டியபடி வைத்துக்கொள்ளலாமா?

நான்காவதுநியாயம், சமுத்திரகுப்தசக்கரவர்த்தி தென்னாடு நோக்கிப் படையெடுத்துப்போந்தபோது அவனது சேனையுந் தேருஞ் செல்லுதற்குத் தடையாயிருந்த மலையொன்றைக் குடைந்து வழி செய்துகொண்டு சென்றதையும் மோகூர்ப் பழையன்மாறனை யுத்தத்தில் வென்றதையும் சங்கப்புலவர்கள் பாடியிருத்தலாற் செங்குட்டுவன் காலம் கி. பி. 4-ம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியாகக்கொள்ளல் பொருத்தமாமென்பது.

சமுத்திரகுப்தனது சிலாசாஸனத்தில் மேற்கண்டமலையைக் குடைந்ததையாவது மோகூர்ப்பழையன்மாறனை அவன் வென்றதையாவது சொல்லியிருப்பதாகத்தெரியவில்லை. அப்படிச் செய்திருந்தால் தன்புகழை நிலைநாட்டுமெண்ணத்துடன் சாஸனமெழுதிச் சிலையில் வரைந்தவவன் இந்தவிரண்டு சிறந்தசெய்திகளையுஞ் சொல்லாமல்விட்டிருப்பானென்று நினைப்பதற்குச் சிறிது மிடமில்லை. மோகூர் பாண்டிநாட்டின் றெற்கேயுள்ளது. மோகூர்வரை சமுத்திரகுப்தன்சென்றிருந்தாற் குமரிவரையிற்சென்றதாய்ச் சொல்வது பொருத்தமுடையதாகவேயிருக்கும். குமரிவரையில் அவன் சென்றதாய் நினைப்பதற்குச் சிலாசாஸனவாசகங்களி லிடமில்லை. அவன்சென்றிருந்தால் அதைப் பெருமையாய்ப் பூமி தெற்கே யெவ்வளவுண்டோ அவ்வளவுவரையிற் சென்று திக்விஜயஞ்செய்தேனென்று சொல்லிக்கொள்ளாமலிருக்க நியாயமில்லை. அந்தச் சிலாசாஸனத்தைச் செவ்வையாய்ப்படித்தறிந்த ஸ்மித்தென்பவரும் புரொபெசர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும்

சமுத்திரகுப்தன் றெற்கே காஞ்சிவரையில்வந்து தன்னூடுதிரும்பினு னென்றுசொல்லியிருப்பதை மூன்றுவதுநியாயத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதிற் காட்டியிருக்கிறேன்.

ஐயங்காரவர்கள், முற்கூறியபடி மாந்தரனை இக் குப்தவரசன் வென்றவனுதலின் அங்ஙனம் சேரனையடக்கி அவன் பாண்டிநாட்டையும் வெல்லக்கருதினன்போலும் என்று சமுத்திரகுப்தனைப்பற்றிச் சொல்லுகிறார்கள். அவன் கேரளதேசத்துக்குச் செல்லவில்லையென்பதையும் மாந்தரன் அவனுல் ஜயிக்கப்பட்டவர்களில் ஒருவனல்லனென்பதையும் முன்னமே காட்டியிருக்கிறேன். குப்தசக்கரவர்த்தி பாண்டிநாட்டை வெல்லக்கருதியதற்கு ஐயங்காரவர்கள் சொல்லுங்காரணமில்லையென்றுகிறது. அதனுல் அவன் மலையைத்துளைத்தானென்பதும், மோகூர்ப்பழையன்மாறனை ஜயித்தானென்பது மில்லையென்றேற்படுகிறது.

அப்படியானுற் சங்கப்புலவர்கள் பின்கண்டவாறு சொல்லுவானேனென்னும் வினுவெழும்.

“முரண்மிகுவடுகர்முன்னுறமோரியர்
தென்றிசைமாதிரமுன்னியவரவிற்கு
விண்ணுறவோங்கியபனியிருங்குன்றத்
தொண்கதிர்த்திகிரியுருளியகுறைத்த.....  ......வரை” அகம். 281.
மாமூலனுர்.

“வெல்கொடித்.........
துணைகாலன்னபுனைதேர்க்கோசர்
தொன்மூதாலத்தரும்பணைப்பொதியில்
இன்னிசைமுரசங்கடிப்பிகுத்திரங்கத்
தெம்முனைசிதைத்தஞான்றைமோகூர்
பணியாமையிற்பகைதலைவந்த
மாகெழுதானைவம்பமோரியர்
புனைதேர்நேமியுருளியகுறைத்த...........அறைவாய்” அகம். 281.
மாமூலனுர்.

“விண்பொருநெடுவரையியறேர்மோரியர்
பொன்புனைதிகிரிதிரிதரக்குறைத்த......வரை” அகம். 69. பரணர்.

“விண்பொருநெடுங்குடைக்கொடித்தேர்மோரியர்
திண்கதிர்த்திகிரிதிரிதரக்குறைத்த
உலகவிடைகழி” புறம். 175. கள்ளில்ஆத்திரையனுர்.

இவைகளில் மோரியரென்று கண்டிருக்கிறது. சமுத்திரகுப்தன் மோரியனல்லன்; குப்தன் மோரியனென்னும்பதம் ஒருக்காலுஞ் சமுத்திரகுப்தனைக் குறிக்காது. ஐயங்காரவர்கள் மேலேசொல்லியிருப்பது

பொருந்ாதென்றும், மோரியவரசன் படையெழுச்சியைப்பற்றிச் சங்கப்புலவர்கள் பாடியிருக்க அதைக் குப்தவரசனதாக்கியது யுக்தமில்லையென்றும் தெளிவாகின்றது. மௌரியர்களிருந்தகாலம் கி. மு. 4, 3, 2-ம் நூற்றாண்டுகளாகும். சமுத்திரகுப்தன் படையெழுச்சி கி. பி. 4-ம் நூற்றாண்டு. காலவேறுபாடு அதிகமாகிறது. இந்தச் சங்கடத்தை நிவர்த்திசெய்துகொள்ளவேண்டியதற்காக மாமூலனார்முதலிய புலவர்களுக்கு அறியாமையைக்கற்பித்து "மேற்குறித்த புதிய சந்திரகுப்தனைத் தலைமையாகக்கொண்டு பாடலியையாண்ட குப்தமரபினரையே மாமூலனார் மோரியரென்று குறித்தனர்போலும்" என்றுகூறினர். மோரியசக்கரவர்த்திகளில் முதலிருவராகிய சந்திரகுப்தன் பிந்துசாரனிவர்கள்காலத்திலே பெண்ணைவரையில் தெற்கேயுள்ள நாடுகள் அவர்களாட்சியிலிருந்தன. திக்விஜயம்செய்யும் சக்கரவர்த்திகள் பல நாடுகளிலுஞ்சென்று தங்களுடைய வெற்றியை ஸ்தாபித்து அவற்றிற் சிலநாடுகளைமட்டுந் தங்கள் நோட்சிக்குக்கொண்டுவருவது வழக்கமாயிருக்கிறது. சமுத்திரகுப்தன்செய்ததும் அதுவே. மௌரியசந்திரகுப்தன் பிந்துசார னிவர்கள் வெற்றியையபேக்ஷித்துத் தெற்குநோக்கிவந்த போது தெற்கே எந்தநாடுவரையில்வந்தார்களென்று தெரியவில்லை. பழையசரித்திரவாராய்ச்சி இவ்விஷயத்தைப்பற்றிப் பூர்த்தியாகுங் காலத்து இது தெளிவாய்த்தெரியும்.

வம்பமோரியரென்னுமொழிக்கு ஐயங்காரவர்கள் புதுமோரியர் என்று பொருள்கொள்கிறார்கள். தொல்காப்பியம் உரிச்சொல்லியலில் "வம்புநிலையின்மை" என்னுஞ்சூத்திரங் காணப்படுகிறது. மோரியர்களிவ்விடம்வந்தவர்கள் உடனே திரும்பிப்போய்விட்டபடியால் நிலையில்லாத மோரியர்களென்று சொல்லுவது பொருந்தும். அதேயியலிற் பின்கண்டசூத்திரங் காணப்படுகிறது.

"மெய்பெறக்கிளந்த வுரிச்சொலெல்லாம்
முன்னும்பின்னும்வருபவைநாடி
யொத்தமொழியாற்புணர்த்தனருணர்த்த
றத்தமரபிற்றோன்றுமன்பொருளே." என்பது.

இதற்கு, முன்னுள்ள சூத்திரங்களில் உரிச்சொற்களுக்குக் கூறிய பொருள்கள் பொருந்தாதவிடங்களில் முன்னும்பின்னும் வருபவைநாடி யொத்தபொருள்கொளல் தகுதியுடைத்து என்று பொருளேற்படும். மேற்குறித்தபாடல்களில் வம்பு என்னும்பதத்திற்கு நிலை

யின்மைப்பொருள்கோடல் பொருத்தமுடையதாயிருப்பதால் வேறு பொருள்கோடற்கு நியாயமில்லை. அப்படிக்கொண்டாலும் சண்டை, தீச்செயல் என்னும்பொருள்கோடல் பொருத்தமுடையது. தமிழ் நாட்டரசர்கள் தங்களுக்கு யாதொருதீங்கும் நினையாதிருக்க மோரி யர்கள் வம்புச்சண்டைக்கு வந்தவர்களாதலால் அது பொருந்தும். குப்தர்களை மோரியர்களாக்கமட்டுந்தான் அதற்குப் புதுமையென்னும் பொருள்கோடல் பயன்படுவதாம். அப்படிக்கொண்டாலும் சந்திர குப்தனும் பிந்துசாரனுந்தானே முதல்மோரியசக்கரவர்த்திகள்; அவர் களைப் புதிதாய்வந்த மோரியரென்று சொல்வதற்குத்தடையென்ன? நந்தர்களுக்குப்பிறகு அவர்கள் புதியர்தானே; சங்கப்புலவர்கள் முன் நடந்தவிஷயங்களைச் சொல்லாமல் தங்கள்காலத்தில் நடந்தவற்றைமட் டுந்தான் சொல்வதென்றுண்டா? மௌரியசந்திரகுப்தன், பிந்துசார னிவர்கள்காலத்தில் நடந்ததை ஏன் அவர்கள் சொல்லியிருத்தல் கூடாது? மேற்கண்ட மூன்றுபுலவர்களுஞ் சொன்னதைக்கொண்டு சந்திரகுப்தன், பிந்துசார னிவர்கள் தென்னாடுகளில் வந்ததாகத் தெரி கிறதென்று சொல்லாது சமுத்திரகுப்தனைச் சொல்வானேன்; இம் மாதிரி விஷயங்களில் பழைய சரித்திரவாராய்ச்சி நன்றாய்ச் செய்யப் படும்வரையில் தாமதிப்பது நலமென்று தோன்றுகிறது.

பழையன்மாறன்காலம் பிந்தியாயிற்றே மோரியர்வந்தகாலத் திருந்தவன் அவனென்று சொல்லுதல் பொருந்தாதென்று சொல்ல லாம். மாமூலனார்பாட்டிற் பழையன்மாறன் என்று சொல்லவில்லை. அவர் மோகூர்என்று மட்டுந்தான் சொன்னார். அது என்றுமுள்ளது. அதனை அப்பொழுது ஆண்டவன் பழையன்மாறனாயேயிருக்கவேண்டு மென்னும் நியமமில்லை.

கொங்கணமோரியர் பிந்தியிருந்தவர்களென்றும், அவர்களைப்பற்றி மாமூலனார்முதலியவர்கள் சொல்லியிருத்தல் கூடாதென்றும் ஐயங்கா ரவர்கள் சொல்லுகிறார்கள். கி. பி. 6, 7 நூற்றாண்டுகளிற் கொங்க ணத்தில் மோரியரிருந்ததாகத் தெரிகிறதென்றால் அதற்குமுந்தியில் லாத மோரியர் புதிதாய்முளைத்தார்களென்று சொல்லலாமா? அதற்கு முந்தியும் அவர்களிருந்திருக்கத்தான்வேண்டும். கி. மு. 2-ம் நூற் றாண்டில் மகதராஜ்யத்தையிழந்த மோரியர் பலநாடுகளிலுழன்று கி.பி. 6, 7-ம் நூற்றாண்டுகளிற் கொங்கணத்தையடைந்தனரென்று

நினைத்தற் கிடமிருக்கிறது. மத்தியகாலத்தில் எந்நாட்டில் இருந்தார்கள், என்னநிலைமையிலிருந்தார்கள், என்னசெய்தார்களென்று இப்பொழுது நமக்குத்தெரியவில்லை. இம்மோரியர் கொங்கணத்திற்குப்போவதற்கு முந்தித் தமிழ்நாட்டுப்பக்கம் வரவில்லையென்று நிச்சயமாய்ச்சொல்ல இப்பொழுதிருக்கு நிலைமையில் தேசசரித்திரம் இடங்கொடுக்காதே; கி. பி. 6-ம்நூற்றாண்டிற் கொங்கணமோரியர் மேலானநிலைமையில் இல்லையென்றால், அதற்குமுந்தி யொருநாளும் மேலானநிலைமையிலிருந்ததில்லையென்று சொல்வதற்கு அதுபோதுமா? இவர்களையேன் வம்பமோரியரென்று சொல்லியிருத்தல்கூடாது? இதுவரையில் நான் சொல்லியதனாலே ஆதியிலிருந்த மோரியசக்கரவர்த்திகளாவது கொங்கணமோரியரென்னும் பெயர்படைத்தவர்களாவது தென்றிசைநோக்கி வந்ததைச் சங்கப்புலவர்கள் சொல்லவில்லையென்று உறுதியாய்ச்சொல்வதற் கிடமில்லை. இதுவரையில் மேற்கண்டபாடல்களிற் சங்கப்புலவர்கள் மோரியரென்னும்பதத்தைப் பிரயோகப்படுத்தியிருப்பதாய் வைத்துக்கொண்டு சொல்லிவந்தேன். இதை மற்றொருபடியாயுங் கொள்ளற்கிடமுண்டு.

புறநானூறு அச்சிடப்பட்டிருக்கிறது. அகநானூறு அச்சிடப்படவில்லை. பாடங்களி லெத்தனைபேதங்களிருக்கின்றனவோ தெரியவில்லை. புறநானூறு அச்சிட்டிருப்பதில் ஐயங்காரவர்களால் மேலே காட்டப்பட்டிருக்கிற பாடல் அடியிற்கண்டவாறு இருக்கிறது.

"விண்பொருநெடுங்குடைக்கொடித்தேர்மோரியர்
திண்கதிர்த்திகிரிதிரிதரக்குறைத்த
உலகவிடைகழியறைவாய்நிலைஇய
மலர்வாய்மண்டிலத்தன்னநாளும்
பலர்புரவெதிர்ந்தவறத்துறைநின்னே." என்பது.

இப்பாடல் ஆதனுங்கன்பேரில் கள்ளில் ஆத்திரையனார்பாடியது. இதற்குப் பழைய சிறந்தவுரை யொன்றிருக்கிறது. அது புலவர்பெருமான் சாமிநாதையரவர்களால் அச்சிடப்பட்டிருப்பதில் மேற்கண்ட வரிகளுக்குப் பின்கண்டவாறு அர்த்தமெழுதப்பட்டிருக்கிறது. அதாவது "வென்றிவேலையுடைய விசும்பைத்தோயும் நெடியகுடையினையும் கொடியணிந்த தேரினையுமுடைய நிலமுழுதுமாண்டவேந்தரது திண்ணிய ஆர்சூழ்ந்த சக்கரமியங்குதற்குக் குறைக்கப்பட்ட வெள்ளிமலைக்கப்பாலாகிய உலகத்திற்குக் கழியுமிடைகழியாகிய அறைவாயின்கண்

தேவர்களால்நிறுத்தப்பட்டு இருபொழுதும் ஒருபெற்றியேநிலைபெற்று விளங்கும் பரந்தவிடத்தையுடைய ஆதித்தமண்டலத்தையொப்ப நாள் தோறும் இரவுபகலென்னுமற் பலரையுங் காத்தலையேற்றுக்கொண்டு ஒருபெற்றியேவிளங்கிய அறத்துறையாகியநின்னை" என்பதாம். மேற் படியுரைக்கீழ்விவரணத்தி லடியிற்கண்டபடிவிசேஷக்குறிப்புகள்காணப் படுகின்றன. அவற்றுள்ஒன்று:-"ஆதனுங்கனே, மண்டிலத்தன்ன அறத் துறைநின்னை நின்னுடையேனாகிய யான்மறப்பின் மறக்குங்காலமாவது. என் யான்மறப்பின் மறக்குவென்" இரண்டு:—"ஓரியராவார்—சக்கர வாளசக்கரவர்த்திகள்; விச்சாதரரும் நாகருமென்பர்." மூன்று:— "திகிரிதிரிதரக்குறைந்தவென்றோதி, சக்கரவாளத்திற்கு அப்பாற் பட்டஉலகத்து ஓரியர்திகிரியூடறுத்துச்சேறலிற் பிளவுபட்டவாயிற்கு அப்பாலாகிய உதயகிரிக்கண் நிலைபெற்ற ஆதித்தமண்டலமென் றுரைப்பாருமுளர்" என்பன. மேற்காட்டப்பட்ட மாமூலனார், பரணரிவர்கள் பாடலினும் "விண்ணுறவோங்கிய, பனியிருங் குன்றத்தொண்கதிர்த்திகிரியுருளியகுறைத்த.........வரை" "புனை தேர்நேமியுருளியகுறைத்த......அறைவாய்" "பொன்புனைதிகிரிதிரி தரக்குறைத்த......வரை" என்னும் மொழிகள் புறநானூற்றிற் கண்ட வரையையே குறிப்பதாய்த்தெரிகிறது. தமிழ்நாட்டில் மேற்கண்டவரை யிருப்பதேல் அதை யின்னதென்றுகண்டுபிடிக்கவேன் முடியவில்லை? இந்த விசேஷவடையாளம் மாறிப்போவது சாத்தியமல்ல; "மூன் னுறவோங்கிய பனியிருங்குன்றத்து" என்று அந்தவரை வர்ணிக்கப் பட்டிருப்பதனாலே சிறியமலைகளிலொன்றென்று சொல்வதற்கிடமில்லை; இந்தவரையைப்பாடிய சங்கப்புலவர்கள் மூவரும் அந்தவரையின்பேர் இருப்பிடமுதலியவற்றைச் சொல்லாதிருப்பதற்குக் காரணமென்ன? மேலும் சமுத்திரகுப்தனுடைய தேர்ச்சக்கரத்தையா "ஒண்கதிர்த் திகிரி" "பொன்புனைதிகிரி" "திண்கதிர்த்திகிரி" என்று வர்ணித்திருக் கிறார்கள்? அந்தச்சக்கரத்திற்கு "ஒண்கதிர்" "திண்கதிர்" என்னு மொழிகளால் வர்ணிக்கக்கூடிய பிரகாசத்தைச் சங்கப்புலவர்கள் கற் பித்தார்களென்பது பொருந்துமா?

இனி அவர்களது ஐந்தாவதுநியாயமாவது, நக்கீரரால் களவிய லுரை சொல்லப்பட்டது. அவர்லிஷ்யபரம்பரையிற் பத்தாந்தலை முறையி லவ்வுரை யெழுத்துருவடைந்தது. அவ்வுரையெழுதியகாலம்

கி. பி. 8-ம் நூற்றாண்டுக்குமுந்தியிருத்தல் கூடாதென்பதற்கு நல்ல சாக்ஷிய மவ்வுரையிற் காணப்படும். தலைமுறைக்கு 30 வருஷமாக வைத்துப் பத்துத்தலைமுறைக்கு 300 வருஷத்தைக்கழித்தால் நக்கீர ரிருந்தது கி. பி. 5-ம் நூற்றாண்டென்று ஏற்படும், அது சங்கக்கால மாகுமென்பது.

ஐயங்காரவர்கள், செந்தமிழ்த்தொகுதி 4, பக்கம் 303-ல் இளம் பூரணரென்னும் பெரிய வியாசமொன்று எழுதியிருக்கிறார்கள். நக்கீர னார்க்குச் சிஷ்யபரம்பரையிற் பத்தாந்தலைமுறையிலிருந்த நீலகண்ட னாரைக்குறிப்பித்து "அவர்க்குப் பிற்பட்டுவந்தவுரையாளர் ஒருவர் உரைநடையிற் களவியலுரையை எழுதிவைத்திருத்தல்வேண்டு மென்றும், மற்றோரிடத்தில் "பாண்டியன் நெடுமாறன்காலத்துக்குப் பிற்பட்ட பழையவுரையாளர் ஒருவராலே களவியலுரை யெழுதப் பட்டிருத்தல்வேண்டும்'' என்றும், இன்னும் ஓரிடத்தில் இளம்பூரணரும் களவியலுரைகாரரும் ஒருவர்போலும்" என்றும் எழுதியிருக்கிறார்கள். ஐயங்காரவர்கள் முந்தியெழுதியபடி நக்கீரர் ஷிஷ்யபரம்பரை பத்தான வுடன் உரை யெழுத்துருவடையவில்லை. பிற்காலத்தி லுரையாள ரொருவராலெழுதப்பட்டிருத்தல்வேண்டுமென்று அவர்கள் சொல் வதே யெனது கொள்கையும். இப்பொழுது அவர்கள் முன்சொன்னதி னின்றும் மாறிக்கூறுவதற்கு யாதொருநியாயமுஞ் சொல்லவில்லை. அவர்கள் செந்தமிழ்த்தொகுதி 4-ல் எழுதியிருக்கிறபடி களவியலுரை யை யெழுதியவர் ஊர், பெயர், காலமொன்றுந்தெரியவில்லை. கி. பி. 9, 10-ம் நூற்றாண்டுகளில் அவ்வுரை யெழுதப்பட்டிருக்கலாமென்று நினைப்பதற் கிடமிருக்கிறது. உரையெழுதியகாலம் நிச்சயமாகும்வரை யில் ஐயங்காரவர்கள்போடுங் கணக்குகளெல்லாம் பயன்படாவென்பது தெளிவு. நெடுமாறன் சிலாசாஸனம் ஒன்று கி. பி. 770-ம்வருஷத்தில் வரையப்பட்டிருக்கிறது. ஐயங்காரவர்கள் சொல்லுகிறபடி 300-ஐ இதிற் கழித்தால் கி. பி. 470-ம்வருஷமாகிறது. அது ஐயங்காரவர்கள் சொல்லுகிறபடி மதுரையில் வச்சிரநந்தி ஜைனசங்கம் கூட்டியதாகச் சொல்லப்படுகிறகாலம். பாண்டியர்கூட்டியசங்ககாலமாகாது.

ஐயங்காரவர்கள்கூறிய ஐந்துநியாயங்களில் ஒன்றேனும் நிலை பெறுமையால் அவைகளைக்கொண்டு தமிழ்ச்சங்கத்திறுதிக்காலம் கி. பி. 5-ம் நூற்றாண்டென்றுகொள்வதற்குச் சிறிதுமிடமில்லை.

K. S. ஸ்ரீநிவாஸபிள்ளை.

# செந்தமிழ்ச்சிறப்பு

## காப்பு.

### விநாயகர்துதி.

செந்தமிழின் சீரிணையுஞ் செந்தமிழ்ப்பா வாணரையுஞ்
செந்தமிழ் பாலிக்குஞ் சீலரையுஞ்—செந்தமிழிற்
பாடப் புகுமுன் பணிந்து கரிமுகனை
நாடித் துணைபெற்றோம் நாம். (1)

### திருமால்.

மையலற மைத்துனற்கு வாய்மைத் தெளிவூட்டித்
துய்யநெறி காட்டித் துயரோட்டும்—மெய்யருளுந்
தண்குருகூர் வேதத் தமிழ்மாறன் பண்பருகிக்
கண்பெருகு நீர்த்துளியுங் காப்பு. (2)

### சிவபெருமான்.

ஆறன் றழைத்துதவி யன்பன் விடாய்தீர்த்தான்
மாறன் மருகன் மதுரேசன்—நீறணியுஞ்
சொக்கன் றமிழின் சுவைதேர் முதற்கவிஞன்
எக்கணத்து மெம்முளத்த னே. (3)

### முருகக்கடவுள்.

வித்தகர்கள் போற்றிடுஉ மெய்ஞ்ஞான பண்டிதனை
முத்தமிழ் மாமுனிக்கு முன்விரித்த—உத்தமனைத்
தேவாதி தேவனைச் செந்தில் வளர்குகனை
நாவாரப் பாடியரு ளுடு. (4)

### அங்கயற்கணம்மை.

செப்பருஞ் செந்தமிழின் சீரிணையான் பாவலரு
மொப்பவே பாட வுறுந்துணையாப்—பொற்பதுமச்
செங்கையிற் கோலேந்தித் தென்மதுரை பாலிக்கும்
அங்கயற்க ணம்மை யருள். (5)

## கலைமகள்.

வெண்கலையும் வெண்மலரு மேவிப் பிரிதலிலாப்
பண்குலவு யாழ்வருடும் பாணியோ—டொண்கலைதேர்
செந்தமிழ் வாணர் தினமு மனமகிழ
வந்தருளுஞ் சுந்தரியை வாழ்த்து. (6)

## தமிழ்த்தெய்வம்.

ஆய தமிழ்மொழியை யன்னையைத் தெய்வத்தைத்
தூய கவிமலர்க ளேவியே—ஏயநறுங்
கண்டுங் கனிதேனும் பாலுங் கலந்தமொழி
கொண்டாங் கதன்பெருமை கூறு. (7)

## நூல்.

ஆதித்தன் முன்மின் மினிபோலா மத்தமிழை
யோதிப் பயனை யுணர்மினென—வாதித்துச்
சத்தமிட் டாங்கிலமே சால்புடைத்தா மென்றுரைக்கும்
உத்தமரு மெத்த வுளர். (1)

தாயார் பிணியிற் றளர்வுற்று லாதரித்து
நோய்தீர்த் திடாதவனை நொந்திகழுந்—தீயார்போற்
செந்தமிழைத் தாய்மொழியைச் சிறிப் பழிகூறும்
நிந்தைநம தென்றுணர்மி னே. (2)

கற்றோரும் காவலருங் கண்ணியமென் றெண்ணித்தஞ்
சொற்றோறு மாங்கிலச் சொற்கலக்கு—மற்றோருந்
தென்மொழியைக் கைவிட்டார் தெய்வ மெனத்திகழும்
இன்மொழியைத் தாயை யிகழ்ந்து. (3)

பத்திரிகை வாயிலாற் பண்டிதராற் பாமரரால்
வித்தைபயி லுஞ்சிறுவர் வேட்கையா—லெத்திசையுஞ்
சென்றுலவு மாங்கிலம்போற் செந்தமிழுஞ் சீர்பெருகி
யென்றுலவு நாடெங்கு மே. (4)

செந்தமிழை யாங்கிலத்தார் சீர்தூக்கிச் செப்பிடா
மெந்தமொழி யென்றதனை யெண்ணாது—நிந்தித்தல்
பெற்றா ளருமை பிறருரைக்க வன்பவள்பாற்
பற்றா விழிஞரியல் பாம். (5)

தம்மதமுந் தந்நாடுந் தம்மொழியும் வேறெனினும்
அம்ம தமிழ்மொழிக்க ணார்வமுறுஞ்—செம்மனத்தன்
மேனாட்டுப் பாதரியாம் வீரமுனி போற்றமிழாய்ந்
தானாப் புகழ்படைத்தா ரார். (6)

வங்காள மிந்தி மகராட் டிரமுதலா
மங்கா தொலித்து வளர்மொழியுந்—தங்குறுபண்
சிந்தவரு மாந்திரமுஞ் செந்தமிழு மேனையவும்
இந்திய யாழி னிசை. (7)

ஏனை மொழிநன் கிசைப்பத் தமிழினிசை
ஈன முறாத விழுக்கன்றோ—கானவிசை
கற்றார் செவிக்குக் களிப்பூட்டும் பண்ணியலைப்
பற்றாத யாழென் பயன். (8)

எங்கும் பரவி யிசைபெறூஉ மாங்கிலத்தைத்
தங்கட் குறுதுணையாத் தாங்கொண்டு—பொங்குபயன்
பெற்றுமவர் தாய்மொழியைப் பேணியுஞ் சீர்பெற்றார்
மற்றமொழி மாந்தர் மகிழ்ந்து. (9)

வித்தைக்குப் பொன்னே விழுப்பயனென் றாங்கிலத்தை
நத்தித் தமிழ்மொழியை நாடாநாம்—பித்தராய்க்
காவலனை நம்பிக் கணவனைக் கைவிட்ட
பாவையினுக் கீடாவோம் பார். (10)

எத்துணைச் சீருடைய வேனும் பிறமொழிநம்
சித்தத்துட் டேங்கித் தெளிவூட்டும்—புத்தமுதாய்ச்
சிந்தைக்குத் தேனாய்ச் செவிக்கினிதாய்ச் சீர்பெறுநம்
சொந்தத் தமிழாமோ சொல். (11)

மற்றமொழி பற்பலவு மாண்புடைய வாயினுநம்
நற்றமிழுக் கீடாமோ நானிலத்தீர்—சுற்றிவருங்
கோளுட் சிறிதெனினுங் கோலக் குளிர்மதியே
நீளிருளை நீக்கிடுமே னின்று. (12)

அண்ட மலையளவா வாதித்த னோரனுவாக்
கொண்ட ககோளமெனுங் கோலவான்—மண்டலத்தில்
ஞாலத் தவர்பரிதி நாடியே சீர்பெறுதல்
போலத் தமிழ்நம் புகல். (13)

தங்கிருளை நீக்கத் தரணிதனைத் தான் சுழன்றே
யெங்கு மிரவியொளி யேற்றிடல்போற்—சங்கையறத்
தத்தமக் கேற்புடைத்தாந் தாய்மொழியிற் றும்பயின்றே
உத்தம ரேற்ப ரொளி. (14)

பன்னாட் பயின்றுமனம் பற்றுறினு மற்றமொழி
யென்னுகு நந்தமிழுக் கீடாமோ—தந்நாவிற்
கேற்றசுவை யொன்றே யிருமூன்ற னுள்விழைந்து
போற்றுவரான் மாந்தர் புசித்து. (15)

தங்குலமுந் தம்மதமுந் தந்நாடுந் தம்மொழியும்
பொங்கியதிர் நீர்சூழ் புவியின்கண்—எங்குறினு
மாந்தர் மனத்தை வயப்படுத்துந் தன்மையவாற்
காந்தமெனத் தம்பாற் கவர்ந்து. (16)

விண்ணின் வருதாரை மேவா மணஞ்சுவையை
மண்ணன் குதவ மருவுறுமால்—எண்ணுங்கால்
ஞாலத்தெந் நூலு நமக்குப் பயன்றருமே
சாலத் தமிழ்மொழிக்கட் சார்ந்து. (17)

வெற்பின் விழுந்தொழுகும் விண்டாரை வெள்ளமாய்
நற்பய னல்கு நதியாகுஞ்—சொற்பொருள்சேர்
எத்தகைய வான்கலையு மேற்றமிகு தாய்மொழிசார்ந்
துத்தமருக் கூட்டு மூரம். (18)

கண்ணாகுந் தாய்மொழியிற் காணும் பலகலையும்
நண்ணார் பிறமொழியை நாடுதலென்—கண்ணுடி
தோற்று கனியிற் சுவைவருமோ பொன்மலரி
னூற்ற முளதோ நவில். (19)

பண்ணாருந் தாய்மொழிக்கட் பாவும் பலகலையு
மெண்ணா ரயன்மொழிச்சீ ரேற்றிடுதன்—மண்ணுடிப்
பெய்யாது மாரி பெருங்கடலிற் பெய்தற்றே
யுய்யா ததனா லுலகு. (20)

எண்ணும் பிறகலைக ளெய்திடினுந் தாய்மொழிக்க
ணுண்ணுங் கலையே யுயர்ந்தோங்கும்—மண்ணின்வீழ்
மாரி பருகி வளர்வித்தே வானோங்கி
ஆரும் நிழன்மரமு மாம். (21)

*நன்றாய்ந் துரைத்திடுமி ணும்பரத கண்டமெலாம்
வென்றா ளரசோ விழுமியசீர்—குன்றாது
நாற்றிசையும் போற்றவரு நம்ஷேக்ஸ் பியர்மொழியோ
யேற்ற மிரண்டினுள்யா தென்று. (22)

ஆங்கிலமாந் தம்மொழிக்க ணார்வமுற் றோர்கலைஞன்
ஓங்க வினவியசீ ருய்த்துணர்ந்தும்—பாங்குறுநந்
தாய்மொழியைச் செல்வத் தமிழ்மொழியைக் கைவிட்டோம்
சேய்பழிக்கிற் றுய்க்கென் சிறப்பு. (23)

இக்காலத் தெங்கு மிசைத்தோங்கு மெம்மொழிக்கு
முற்காலத் துள்ள முதுமொழியாய்த்—தக்காரும்
போற்றுந் தமிழின் பொலிவைப் புகல்வேம்யாம்
சாற்று முரைகேண்மின் சற்று. (24)

மன்னு நெடுமால் வரையுங் குணகடலுங்
கன்னித் துறைபாய் கனைகடலும்—மின்னிமுகி
லார்க்கு மலைநாடு மாங்குதனக் கெல்லையா
வேற்குந் தமிழ்நா டிது. (25)

---

* இதுமுதலிரண்டுங் குளகம்.

தக்கவட மால்வரையைத் தாழ்த்திக் கடவுள்குழாம்
நிற்க வுயர்திசையை நோக்கி—முக்கணனார்
இட்ட பணியேற் றெழில்சேர் பொதியமமர்
சிட்ட னளித்ததமிழ் தேர். (26)

இருபொருளு நாற்பாவு மைந்திணையு மேற்று
மருவுமோன் பான்சுவையும் வாய்த்தே—பெருமிதஞ்சேர்
மும்மன்னர் காப்புடைத்தாய் முச்சங்கத் தோங்குதமிழ்க்
கம்மவிணை கூறலரி தாம். (27)

முத்தமிழ்ச் செல்வியவள் மூவா வுலகினிடை
நித்த முவந்து நிலவுறுமே—உத்தமரோ
டங்கத் தினரா யமரு மரனருளாற்
சங்கத் தரங்கத்துச் சார்ந்து. (28)

நெற்றித் தழற்க ணிமலன் றிருக்கவிக்குங்
குற்றத்தைக் கூறிக் குணந்தேருஞ்—சொற்றிறஞ்சேர்
வல்லார் கழகம் வளர்த்தநம் வண்டமிழ்நூல்
கல்லா ருணரார் கவி. (29)

தஞ்சமென நாடித் தமைச்சாரும் பாவலருக்
கஞ்ச லெனவே யபயமீந்—தின்சுவைசேர்
சொற்பொருள ணிப்பொலிவுஞ் சோரா தளித்திடலாற்
கற்பகமைங் காப்பிய நூல் காண். (30)

சேமப் பொருளென்பர் செந்தமிழ்ப் பாவாணர்
காமுற் றணியுங் கலனென்பர்—தோமற்ற
தொல்காப் பியமென்னுந் தூய தமிழ்நூலைப்
பல்காலுங் கற்றோர் பயின்று. (31)

காப்பியமே யாறுங் கரையே யிலக்கணமாம்
வாய்ப்ப வகுத்தவுரை வாய்க்காலாம்—நாப்பயிலும்
பாவாணர் சொல்வளமே பண்ணையா மெய்ந்நெறியே
ஓவாப் பலனு முயிர்க்கு. (32)

பாரம் பெரிதெனினும் பண்பார் சிறுநிறையிற்
றேரும் படிக்கற்போற் றிண்ணியமெய்—சாருங்
கருத்தைச் சுருக்கத்திற் காட்டிடுமே தாட்டி
திருத்தத் தமிழிற் றெளி. (33)

முப்பாற் கடலு முகந்ததிரு வள்ளுவரை
யொப்பா ருலகி லுளர்கொல்லோ—உப்பாருஞ்
சீற்றக் கடலுகர்ந்த தெய்வக் குறுமுனிவன்
ஆற்ற லரிதன் றறி. (34)

தாசரதி மாசரிதத் தண்கடலுண் டின்பொருள்பெய்
தாசுகவி வீசிவிரிந் தாற்றெழுக்காய்—வாசமலி
சந்தமணி சிந்துந் தமிழ்முகிலாங் கம்பனருள்
செந்தமிழிற் சிந்தை செலுத்து. (35)

மற்றிறமும் விற்றிறமும் வாய்ந்தபெருந் தம்பியரைப்
பெற்றிருந்தும் பற்றூர் பிழைபொறுத்த—கொற்றவன்றன்
மாசரிதம் பேசிவரு வண்ணமொழி வில்லிதமி
ழோசைநனி வீசுகவி யோது. (36)

விஞ்சைமிகு வஞ்சரின வேரறுப்ப வேலெடுத்துச்
செஞ்சமரிற் பஞ்சாச் சிதறடித்தோன்—இன்சரிதக்
கந்தமது சிந்துங் கவிநாதன் கச்சியப்பன்
செந்தமிழிற் சிந்தை செலுத்து. (37)

பொன்னி பரவும் புனனா டனும்பரவத்
தன்னை மதியார் தலையடக்கிச்—சொன்னயஞ்சேர்
கோவையுலா வந்தாதி கூறுங் கவிக்கூத்தன்
நாவை மறந்திடுமோ நாடு. (38)

ஒலியும் பொருணலமு மொக்கத் தொனிக்கும்
பொலிவு மணிவளமும் பூண்டு—பலகலைதேர்ந்
தாய்ந்தோ ரகத்தெளிவி னாழ்ந்தே யமிழ்தொழுகிப்
பாய்ந்தோடு மேகளவெண் பா. (39)

உள்ள முருகி யுரைததும்பி மெய்ம்மறந்து
கள்ளமி லின்பக் கடலாடி—அள்ளிவரு
போதத் தெளிவூட்டும் பொய்யாத மெய்யன்பர்
வேதத் தமிழ்மொழியை மேவு. (40)

நாதனையுந் தூதுவிடு நற்றமிழை வையைவரு
மோதலையின் மீதெதிரு முத்தமிழைப்—போதமிகு
தொண்டர்தந் தோத்திரமும் பாசுரமுந் தோய்ந்துகமழ்
வண்டமிழை யுண்டு வழுத்து. (41)

பத்திப் புனல்பெருகப் பாயுந் திருத்தொண்டர்
சித்தத் தெளிவிற் றிளைத்தாடிப்—புத்தமுத
மன்ன வவர்சரித மார்ந்தே யவருளாம்
நன்னிழல் சார்வீர் நயந்து. (42)

அண்டர் குழாம்போற்று மாறுமுகா வென்றுருகித்
தொண்டன் அருணகிரி தோத்தரிப்ப—மண்டுதிருச்
சந்தமுந்த வந்துசிந்தச் சர்க்கரைதேன் பால்கனியும்
பிந்தமுந்து செந்தமிழைப் பேண். (43)

அட்டாக் கரத்தா னரங்க னகமகிழ
மட்டார் பிரபந்த மாலையெட்டும்—கட்டாகச்
சாத்து மணவாள தாசன் கவியனைத்தும்
நாத்தழும் பேற நவில். (44)

முருகன் திருவருளான் மூங்கைவாய் பேசப்
பெருகுங் கவிமாரி பெய்தே—நிருபருமே
கொண்டாட வந்த குமர குருபரன்போ
லுண்டோ கவிஞ ருரை. (45)

(இன்னும்வரும்.)

N. V. சுந்தரராஜையர் B. A., L. T.,
உதவிக்காரியதரிசி, மதுரைத் தமிழ்ச்சங்கம்.

# DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

## சப்பாத்துக்கள்ளியின் உபயோகங்கள்.

இக்கள்ளியானது நமது தேசத்தில் பலபாகங்களிலும் படர்ந்து ஏராளமான நிலங்களை மூடிக்கொண்டிருப்பதால் இதைக் கிருஷிகர்களுக்குக்கெடுதியை உண்டாக்கும்பொருட்டு ஓர் சாபத்தினுலுண்டான பூண்டென்று எண்ணுகிருர்கள். சில இடங்களில் விவசாயத்துக்கு ஏற்ற நிலத்தில் இது பரவி மூடிக்கொண்டிருப்பதால் அந்நிலங்கள் கிருஷிக்கு உபயோகமற்றதாய்த் தற்காலத்தில் ஆய்விட்டன. அநேக கிராமங்களுக்குச் சமீபமாயுள்ள குத்துச்செடிகள் வளரும் குறுங்காடுகளில் இச்செடிகள் மிகுதியாகமுளைத்து அந்நிலங்களில் ஜனங்களுக்குப் பிரயோஜனப்படக்கூடிய புல், பூண்டு, செடி முதலியவைகள் முளைக்காவண்ணம் இது வளர்ந்து மூடிக்கொண்டிருக்கிறது; ஆதலாலவ்விடங்கள் உபகாரப்படாமலிருக்கின்றன. அநேக கிராமங்களில் வழியின்சமீபமாய் இதுபடர்ந்து வருஷாவருஷம் விருத்தியாகிவருகின்றது. இவ்வழிகளும் அநேகமாகத் தன்னளவில் குறுகிக்கொண்டேவருகின்றன. புறம்போக்குநிலங்களில் இவைகள் மிகுதியாகவளர்ந்து மூடிக்கொள்வதால் அந்நிலங்கள் எந்தவேலைக்கும் பிரயோஜனமற்றுப்போகின்றன. இந்நாகதாளிப்புதர்களுக்கு மறைவிற்போய் ஜனங்கள் மலஜலங்கழிப்பதால் அவைகள் இவற்றை நல்ல உணவாகப்பெற்று வளர்வதோடு அக்கிராமத்திற்குச்சுகாதாரக்குறைவையும் உண்டுபண்ணுகின்றன. ஆகையால் இந்த ராக்ஷஸப்பூண்டைக் கிராமாந்தரங்களிலிருந்து எப்படி நிர்மூலமாக்குவதென்பது, கிருஷிகர் ஆலோசனைசெய்து கவனிக்கவேண்டிய விஷயங்களில் ஒன்றுயிருக்கிறது. இங்குமங்கும் இவ்விராஜதானியிற் சில இடங்களில் சில தாலூகாபோர்டார்களும், ஜில்லாபோர்டார்களும் இப்பூண்டை நிர்மூலப்படுத்தப் பிரயத்தனங்கள் செய்துகொண்டிருந்தபோதிலும் எல்லாக்கிராமங்களிலுமிருக்கும் விவசாயிகளும்இவ்விஷயத்தில் ஒத்தாசைசெய்தாலொழிய இதை விசேஷமாய்த் தொலைக்கச்சாத்தியப்படமாட்டாது.

கோயம்புத்தூர் ஜில்லாவின் சில பாகங்களில் இந்நாகதாளியை அப்புறப்படுத்தி மண்ணுடன் கலந்து மட்கவைத்து எருவுக்கு லாயக்காகும்படி செய்தபின் கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய பயிர்

செய்யும் புன்செய்களுக்கும், மிளகாய், புகையிலை, கோதுமை, வாழை, கரும்பு முதலியன பயிர்செய்யும் தோட்டங்களுக்கும் எருவாய் உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் எல்லாக் கிருஷிகரும் இம்முறையைக் கையாடுகிறதில்லை. கிருஷிகர் பயிரிடும் நிலங்களுக்குள் மூலைமுக்குகளில் இந்நாகதாளி வளரும்பொழுதும் வெளியிலிருந்து தங்கள் நிலத்துக்குள் பரவிவருஞ்சமயங்களிலுந்தான் இவற்றை அனேகமாய் அப்புறப்படுத்தி மண்ணுடன் மட்கவைத்து எருவாய் உபயோகிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். சில கிருஷிகர் தங்களுடைய நிலங்களுக்குச் சமீபத்தில் சப்பாத்துக்கள்ளி ஏராளமாய் அகப்பட்டால் அதைவெட்டி எருவுக்கென்றே சேகரித்து மட்கவைக்கிறார்கள். ஆனால் இந்தவழக்கம் எவ்வளவுதூரம் கையாடவேண்டுமோ அவ்வளவுதூரம் கையாடப்படவில்லை என்றாலும், கிருஷிகர் தங்களுடைய நிலங்களைச் சீர்திருத்துவதற்காக நாகதாளிப்புதர்களுக்குக் கீழேபடிந்திருக்கும் மண்ணை (கள்ளி மண்ணை) வண்டிகளில் ஏற்றிக்கொண்டுபோய் நிலங்களிற் கொட்டும் வழக்கத்தைக் கையாடுகிறார்கள். புறம்போக்குநிலங்களிலும், குளக்கரைகளிலுமுள்ள இம்மண்ணை அடித்துக்கொண்டுபோக மண்கிரயம் கிடையாது. மண் அடித்துக்கொண்டுபோகவேண்டிய இடம் அரைமைலுக்குள்ளிருக்குமாகில் நாகதாளிப் புதர்களை வெட்டி, அப்புறப்படுத்திவிட்டு, அப்புதர்களுக்கு அடியிற்படிந்திருக்கும் மண்ணைவெட்டி அப்புறப்படுத்தி வண்டியில் ஏற்றிக்கொண்டுபோவதற்கு வண்டி ஒன்றுக்கு அணா 2 தான் செலவாகும். இப்போது கூலியாட்களுக்குக் கூலி அதிகரித்துக்கொண்டுவருவதால் ஒரு வண்டிக்குக் கூலி ஜாஸ்தியாகிக்கொண்டேவருகிறது. நாகதாளிப் புதர்களுக் கடியிற் படிந்திருக்கும் மண்ணனது எருச்சத்துள்ளது. ஏனென்றால் காற்றுக்கொண்டுவரும் இலை சருகு முதலியவைகளும் மற்ற இந்திரியவஸ்துக்கள் அடங்கியபொருள்களும் புதரினால் தடுக்கப்பட்டு அப்புதரின் அடியில் மட்குவதனால் எருச்சத்து ஜாஸ்தியாகிறது. நாகதாளியிலேயே நூற்றுக்கு 60 பாகம் இந்திரியவஸ்து இருக்கிறதென்று டாக்டர் லெதர் துரையவர்கள் ரசாயனப் பரீக்ஷைசெய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வளவு இந்திரியசத்துள்ள நாகதாளியை அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் எருச்சத்து அடங்கிய மண்ணுடன்சேர்த்து மட்கவைத்தால் அப்படி மட்கின பொருளில் எருச்சத்து ஜாஸ்தியிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. நமது நிலங்களில் அநேகமாய் இந்திரியவஸ்து

குறைந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். இப்படிப்பட்ட நிலங்களுக்கு நாகதாளியை அதன்கீழ்ப் படிந்திருக்கும் எருச்சத்துள்ள மண்ணுடன் கூட்டி மட்கவைத்து அதை எருவாய் உபயோகப்படுத்தினால் அதிக அனுகூலத்தை உண்டாக்கும். இப்படி நாகதாளியை மண்ணுடன் மட்கவைத்து எருவாக உபயோகிப்பதால் கிருஷிகருக்கு இலைசாக எரு அகப்படுவதுடன் அநேகவிஷயங்களில் தற்காலம் கெடுதியே உண்டுபண்ணிக்கொண்டிருக்கும் இந்த ராக்ஷஸப் பூண்டும் தொலையஏதுவாகிறது. நாகதாளியை மட்கவைத்து எருவாக்க அடியிற் சொல்லும் முறைகளைக் கையாடிற் சித்திபெறலாம்.

(1) ஆறு அடி அகலமும் 3 அல்லது 4 அடி ஆழமும் நமக்கு வேண்டிய அளவு நீளமும் உள்ள பள்ளங்களை சாரல் மழைக்குப் பின்னும், காலமழைக்கு முன்னும் தோண்டித் தயாராக வைத்திருக்க வேண்டும். மழைகாலங்களில் கிருஷிகருக்கு வேலை ஒழிந்திருக்குஞ் சமயங்களில் நாகதாளிப் புதர்களை வெட்டி அப்புறப்படுத்தி இக்குழிகளில்நிறைத்து,இக்குழிகளிலிருந்துஎடுத்தமண்ணால்மூடிவிடவேண்டும். சிலநாளைக்குள் குழிகளுக்குள்ளிருக்கும் சப்பாத்துக்கள்ளிகள் சற்று மட்கி அமுங்கும். அக்காலத்தில் அப்புறப்படுத்திய சப்பாத்துக்கள்ளிகளின் அடியிலிருக்கும் மண்ணைவெட்டி இந்த அமுங்கிய இடங்களிற் போட்டு நிறைக்கவேண்டும். நல்ல மழைகள்பெய்யும் இடங்களில் இது ஒருவருஷத்துக்குள் மட்கி எருவாகும். ஒரு வருஷத்துக்குள் சப்பாத்துக்கள்ளிகளில் இருக்கும் முட்கள் மட்கியிருக்காவிட்டால் இன்னொரு வருஷம் அப்படியே வைத்திருந்தால் அம்முட்கள் நன்றாக மட்கிவிடும்.

(2) மழை குறைவாய்ப் பெய்யும் இடங்களில் கிருஷிகருக்குச் சாவகாசமிருக்கும்போதெல்லாம் நாகதாளியை வெட்டி எங்கெங்கே சௌகரியமாயிருக்குமோ அவ்விடங்களில் குவித்துக்காயவிட வேண்டும். அதன்மேற் காய்ந்த புல், சருகு கூளம், முள் முதலியவைகளைப் பரப்பி நெருப்பு வைத்தால் முட்கள் அநேகமாய்ப் பொசுங்கிப் போகும். இச்சமயத்தில் இக்குவியலின்மேல் நாகதாளிப்புதர்களுக்கு அடியிற் படிந்த மண்ணையாவது அல்லது பக்கத்தில் அகப்படக்கூடிய மண்ணையாவது மேலே போட்டு மூடி உள்ளிருக்கும் வஸ்து மட்கும் வரை வைத்திருந்தால் இரண்டு மூன்று வருஷங்களில் நிலங்களுக்கு எருவாக உபயோகிக்கக்கூடிய ஸ்திதியில் வந்துவிடும்.

(3) மேற்சொல்லிய இரண்டு விதங்களும் செய்யப் போதிய இடமில்லாவிட்டால், மாடுகள்கட்டிச் சுண்ணும்பு அறைக்கும் ஆலேயில் சுண்ணும்புக்குப்பதிலாக நாகதாளியைப்போட்டு அறைத்தால் நாகதாளியில் தண்ணீர் அதிகமாயிருப்பதால் அரைமணிநேரத்திற்குள் நன்ருய் அறைபட்டுப்போம். அதை மண்வெட்டிகொண்டு அப்புறப்படுத்திக் குழிகளிற் போட்டு அதன்மேல் மண்ணைக்கொட்டி மூடிவைத்திருந்தால் விரைவாக மட்கி எருவாய்விடும். முட்களும் நட்டமாய் நிற்காமல் படிந்திருக்குமாதலால் அவைகள் தைக்காது. இப்படித் தயார் செய்தால் ஆறு முதல் எட்டு மாதத்துக்குள் இது எருவாய் உபயோகிக்க லாயக்காகிவிடும்.

மேலேசொன்ன உபயோகத்தைத் தவிர நாகதாளி வேறுவிதமாயும் உபயோகமாகும். நாகதாளியை நறுக்கி வேகவைத்து அப்புறப்படுத்தியபின் அத்தண்ணீரைச் சுண்ணும்புடன் கலந்து வெள்ளையடிக்க உபயோகப்படுத்தலாம். இப்படி வெள்ளையடித்த சுண்ணும்பு சுவர்களில் ஒட்டிக்கொள்ளுகிறதே தவிர மேலே ஒட்டுகிறதில்லை. ஒரு பானை அல்லது சட்டியில் நாகதாளியைச் சிறுசிறுதுண்டுகளாக வெட்டிப்போட்டு அது நிறையத் தண்ணீர் ஊற்றிச் சுமார் 3 மணிநேரம் வரையில் நன்ருய்க்கிளரி வேகவைத்து இறக்கி அது ஆறினபின், தண்ணீரை வடிகட்டி வெள்ளையடிக்கத் தயார் செய்திருக்கும் சுண்ணும்பு அல்லது கோபிக்கு 150பங்கு சுண்ணும்பு ஜலத்துக்கு நாகதாளி வெந்துவடித்த தண்ணீர் ஒரு பங்கு ஊற்றிக் கலந்து வெள்ளையாவது அல்லது கோபியாவது அடித்தால் நல்லநிறமாயிருப்பதோடு சுவரிலும் நன்ருய் ஒட்டிக்கொள்ளுகிறது. சுவர்களில் ஜனங்கள் சாய்ந்தாலும் அது துணி முதலியவைகளில் ஒட்டிக்கொள்வதில்லை. சாதாரணமாய் சுவர்களின் பக்கத்தில் உட்கார்ந்து அதிற் சாய்ந்துகொள்ளும் வழக்கமுடைய நமது இந்தியர் வீடுகளில் புதிதாக வெள்ளையடித்திருக்கும் சுவர்களின் மேல் சாய்பவர்களுடைய துணியிலாவது, உடம்பிலாவது ஒட்டாமலிருப்பது ஒரு பெரிய அனுகூலம்.

J. CHELVARANGA RAJU,
*Assistant Director of Agriculture,*
*In charge of the Central Division.*

ST. THOMAS' MOUNT,
*24th March 1916.*

சிவமயம்.

# திருஞானசம்பந்தசுவாமிகள் பிள்ளைத்தமிழ்.

பிள்ளைத்தமிழ் என்பது பிள்ளைப்பாட்டென்று சொல்லப்படும். பாட்டுடைத்தலைவனது குழவிப்பருவத்தை வருணிப்பது. இத் திருஞானசம்பந்தசுவாமிகள் பிள்ளைத்தமிழானது மற்றைப்பிள்ளைத்தமிழ்களைப்போலன்றி நாயனார் திருவுலாப்போங்காலத்துப் பாடப்படுவதாகும்.

ஆடவல்லானென ஸ்ரீதியாகேசப்பெருமானது திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானுக்குத் தைப்பூசத்துக்கு முந்திய பத்துநாட்களிலும் திருவுலாச்செய்வித்து சுவாமி நடைவானத்து வரும்போது

**கொக்க ரைகுழல் வீணை கொடுகொட்டி**
**பக்க மேபகு வாயன பூதங்கள்**
**ஒக்க வாட லுகந்துடன் கூத்தராய்**
**அக்கி னேடர வார்ப்பரா ரூரரே.**

(திருநாவுக்கரசு. திருக்குறுந்தொகை.)

என்ற திருவாக்குக்கொப்ப முதற்பத்தியில் இப்பிள்ளைத்தமிழில் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பருவமாகப் பத்துநாளைக்கும், பத்துப்பருவமாக நூலைமுடிப்பதோடு, இரண்டாவது பத்தியில் கொடுகொட்டியும், மூன்றாவது பத்தியில், கொடுகொட்டியும் அடுத்தடுத்து வீணையும், குழலும், கொக்கரை*யும் வாசிப்பதும் வழக்கமாம். தைப்பூசத்திருவிழா, முன்னாளில் மிக்க விமரிசையாக நடைபெற்றதென்பது முதற்பிரகாரத்துச் சுவரில் வடபுறம் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனங்களால் நன்கு தெளியப்படும். இக்காலத்து, நாவலமே கோலாக்கொண்டு நம்மினை நண்ண ஒடம்விட்ட பெருமானைத் திருவுலாச் செய்விக்கும்போதுதான் பங்குனி உத்திரத்திருவிழாவுக்கு தேர்முகூர்த்தம், பந்தர்க்கால் முகூர்த்தம் முதலியன செய்வித்துக்கொண்டு, தீர்த்தமருளச்செய்து, திரும்புகையில் இப்பிள்ளைத்தமிழையும் பாடும்படி செய்கின்றனர். இது இன்றும் நடைபெற்றுவரும் வழக்கமாம்.

---

* இந்த வாத்தியம் இப்பொழுது முயற்கோடாயிற்று. இந்த வாத்தியம் வாசிக்கக் கேட்டோரும் அறிந்த முதியோரும் சிலர் உளர்.

இனி, இந்நூலிற்கண்ட சிலவிசேடங்களாவன.

கடுங்கொலை நீக்கிக் கடவுட் காப்புச்
செங்கீரை தால்சப் பாணி முத்தம்
வாரானை முதல வகுத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே. என்றும்

மங்கலம் பொலியுஞ் செங்கண் மாலே
சங்கு சக்கரக் தரித்த லானுங்
காவற் கடவு ளாத லானும்
பூவினட் புணர்த லானுமுன் கூறிக்
கங்கையும் பிறையுங் கடுக்கையும் புனையுமை
பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே
முழுதுல கீன்ற பழுதறு மிமயப்
பருப்பதச் செல்வியை விருப்புற வுரைத்தும்
நாமகள் கொழுநன் மாமுகி லூர்தி
யொற்றைக் கொம்பன் வெற்றி வேல
னெழுவர் மங்கைய ரிந்திரை வாணி
யுருத்திர ருக்கர் மருத்துவர் வசுக்கள்
பூப்புனை யூர்தியிற் பொலிவோ ரனைவருங்
காப்ப தாகக் காப்புக் கூறல்.

என்பன இலக்கணமாகவிருக்க, இந்நூலுடையார், இவ்வழியைவிட்டு தோணியப்பர், திருநீறு, சொக்கலிங்கப்பெருமான், சிற்சத்தி, விநாயகக் கடவுள், குன்றங்கொன்றகொற்றவன், பொய்கை, பன்னிருதிருப்பெயரும்படைத்த பழம்பதி, பதிகம், சட்டைநாதர், மற்றைத்தெய்வங்கள் என்றபடி பதினொரு திருப்பாட்டாற் செய்திருக்கின்றார்கள். இதற்கு முன்னர் இவ்வாறு விதிவிலக்காகக் காப்புக்கூறிய பிள்ளைத்தமிழை யான் பார்த்திலேனாயினும் பின்னோர் பலர் இதனைப் பின்பற்றி நடந்துளார். இப்பாக்களிற் சில ஈண்டு தருகின்றாம்.

## காப்புப்பருவம்.

### தோணியப்பர்.

கார்மேவும் பொழில்சூழுங் கதிர்மாட வீதிக்
    கழுமலத்தார் பெருவாழ்வைக் கவுணியனைக் கமலத்
தார்மேவுந் திருப்புயத்துச் சைவசிகா மணியைச்
    சம்பந்தப் பெருமானைத் தமிழ்க்களிற்றைப் புரக்க
பார்மேவு மறைவாழத் திருப்பொய்கைக் கரையிற்
    பவளவாய் திறந்தழுத பசுங்குதலை கேட்டுச்
சீர்மேவுந் திருத்தோணி யழகோடு மிருந்தார்
    சென்றுமழ விடையுடனே நின்றதிரு நிலையே. (௧)

## சொக்கலிங்கப்பெருமான்.

அலையார் புனல்சூழ் கூடலிலன் றருகத் திரளைக் கழுவேற்றுங் [பான்
கலையார் செஞ்சொற் றமிழ்ப்பெருமாள் காழிப் பெருமாள் தமைக்காப்
தொலையா நீதித் திருநீற்றுச் சொக்கப் பெருமான் நம்பெருமான்
மலையான் மகளார் தனிப்பெருமான் மன்றுளாடும் பெருமானே. (௯)

## சிற்சத்தி.

இருளுருவ மாலுததி யமுதாக்கி வான்றேவர்க் கூட்டவு
மெழுதரிய நான்மறைக ளயன்வாக்கி லாய்ந்தோதிக் காட்டவு
மிரவியெழு பார்பொதியு மிருணீக்கி வான்றேர்விட் டோட்டவு
மிசைபுனையு மாமுனிவர் தவவாய்ப்பு நீங்காமற் பார்க்கவு
மருவுமத யானைபல திசைகாத்தல் பாங்காகக் காக்கவும் [வும்
வடகனக மால்வரையின் முறைகோத்தல் வான்பாரைப்பார்க்க
மருகிவிடு வார்களிடு பலியேற்கு மாண்டாருக் கோட்டினில் [தும்
வருநெல்லிரு நாழிகொடு குடிவாழ்க்கை வாழ்ந்தானைப் போற்று
அரியசிவ ராகவனை யொழுகாற்றி லூர்ந்தோடத் தாற்கரை
யணையவரு மாமணியை* முகிலார்த்த கோன்கூனைப் போக்கிய
வதிமதுர வாசகனை வழிகாக்கு மாண்டாலத் தாற்பழ
மருள்புரியு மாதவனை யழல்வேட்கை மூன்றாய முத்தொழில்
கருதுசதுர் வேதியனை யருணீற்றை யாங்காணக் காட்டிய
கமலதர நாயகனை யலைவாய்க்குள் வீழ்ந்தோடத் தாற்கவி
கடுகியடு சேவகனை வயல்சூழ்த்த பூங்காழித் தோற்றிய
கவுணியகு லாதிபனை யமண்வேட்டை போந்தானைக் காக்கவே.()

## பதிகம்.

செய்யமலர்த் திசைமுகனுந் திகிரிதரித் தோனுந்
தேடரிய திருவுருவைத் திருவிரன்முன் னிறுத்தி
யையனிவ னெனக்காட்டி யமுதமுத முண்டான்
......நமதென்ற பெருமானைக் காக்க
வைகைநதிக் கெதிர்நடப்பக் கனல்குளிரக் கிடப்ப
மாமுனிவர் தொழுதரற்ற நான்மறையின் சீர்த்த
பையரவின் விடந்தீர்ப்பப் பனைபழுப்பப் பார்ப்பப்
பானுறுந் திருப்பதிகம் பதினறு யிரமே. (௧)

* மாமுனியை (பி-ம்.)

தருமத்தின் வழிபிழைத்தார் புரமெரித்துச் சிலர்க்குத்
தரத்துறையும் பதங்கொடுத்தோ னறத்துறையி னளித்த
திருமுத்தின் சிவிகைமிசை யசையவரு மணியைச்
சேவித்தங் குடன்வருவார் செங்கமலத் தயன்மால்
பருமத்தக் களியானைத் திசையெண்ம ரருக்கர்
பன்னிருவ ருருத்திரர்கள் பதினொருவர் மறைநூற்
கருமத்து மருத்துவராங் கோரிருவ ரெழுவர்
கன்னியர்க ளெனவுரைக்குங் கணககலா திபரே. (கக)

ஒருமலைச் சாபம்வளை யத்திரி புரஞ்செற்ற
வும்பர்நா யகனருளினு
லோரா யிரங்கதிர்க ளுடையசூ ரியரடைய
வுடனிருந் தனைய வொளிசூழ்
பருமணிக் காலினொடு பலகோடி வெண்டிங்கள்
பாரித்த தனைய தரளப்
பந்தரிற் பட்டைச் சுரத்தன்று குலவவரு
பரசமைய குலகாலனீ
தருமலர்த் தாதுவிரி தாமரைக் காடுமெழு
தாணீல முங்குமுதமுந்
தந்தமண நாறுமுலை தந்தவுமை யாளொடு
தடம்புனற் கரையிலுதவுந்
திருமுலைப் பால்நாறு சீகாழி நாடாளி
செங்கீரை யாடியருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடியருளே. (உ)

வசையற வோங்கிய வொருதிரு வோங்கலின் வந்தே தன்றோளின்
வலிமையெ லாஞ்செய முனிவினில் வீழ்ந்து நரம்பா லென்பாலு
மிசைபல தோன்றிய குரன்முதல் வாங்கி யிலங்கே சன்பாட
வினிவரு தீங்கென வெறிபடை யீந்தவன் மைந்தா மென்காவில்
நசையுடன் மேய்ந்தின வெருமைகள் மாங்கனி நின்றே தின்றாலும்
நலனுட னீன்றதன் மகநினை வாம்பெரு நண்பால் வெண்பால்கள்
திசைக ளெலாஞ்சொரி புகலிய ராண்டகை செங்கோ செங்கீரை
செருவினில் வென்றெழு மருகர் குலாந்தக செங்கோ செங்கீரை. ()

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபரம்பரை.

கடவுள்துணை.

தேன ரூமகிழ்த் தொடையலு மவுலியுந் திருக்கிளர் குழைக்காதுங்
கான ரூமலர்த் திருமுகச் சோதியுங் கயிரவத் துவர்வாயு
மோன மாகிய வடிவமு மார்பமு முத்திரைத் திருக்கையு
ஞான தேசிகன் சரணதா மரையுமென் னயனம்விட் டகலாவே.

சீயர்திருவடிகளேசரணம். குருவேதுணை. பெரியதிருவடிக்கவிராயகுருவேநம.

# *இரணியன்வதைப்பரணி.

ஆரணமும் பங்கயத்து ளயனும் போற்ற
வக்கயத்து ளொருகயநின் றழைத்த வந்நாட்
சூரணவு முழுமுதலை துணித்த வென்றிச்
சுடராழி நெடும்படையைத் தொழுதல் செய்வாம். (1)

திரண்டுலகம் பலகாணச் செம்பொற் றூணிற்
சிறுமதலை பெருமைதலைச் செய்ய வேண்டி
யிரண்டுருவிற் றிருவுருவாய் வந்து தோன்று
மெங்கள்பிரா னினிதூழி வாழி யென்றே. (2)

நல்லசுரர் குலமுழுதுந் தொழுது வாழ்த்த
நனியசனிக் குரல்கேட்ட நாகம் போல
வல்லசுரர் குடர்குழம்ப முழங்கும் வெல்போர்
வலம்புரியை நலம்புரிந்து வணக்கஞ் செய்வாம். (3)

மலர்க்கற்றை நறுங்குஞ்சி முடியார் முன்னே
மறைநான்கின் பொருண்முடித்து வடித்து வார்த்தை
சலக்கற்று நின்றநிலை சலியா மைந்தன்
றுன்கற்ற வெட்டெழுத்துந் தழைக்க வென்றே. (4)

*இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தைச்சார்ந்த பாண்டியன் புத்தகசாலையில் இதுவரை அச்சுக்குவராத தமிழ்நூல்களுட் பரிசோதிக்கவியலாது ஒரேபிரதியா யேட்டிற் சிதைவடைந்திருப்பதால் அதன் சொரூபமழியாது பாதுகாக்கக்கருதி இருந்தபடியே வெளியிடப்படுகிறது.

மைவளையுங் கருங்கடல்போன் முழங்கி யார்த்து
வாளவுணர் பொரவொருநாள் வானோர் சேனை
கைவளையும் படிவளையுங் கொடிய போரிற்
கால்வளையுந் தடஞ்சிலையைக் கருத்துள் வைப்பாம். (5)

கயல்வளைய விளையாடுங் கங்கை நன்னீர்க்
காவிரியிற் கண்டுயிலும் பெருமாள் காக்குஞ்
செயல்வளையா தறம்வளர்க்குஞ் செங்கோல் செல்லத்
திருவாணை யுலகேழுஞ் சிறக்க வென்றே. (6)

வெம்பகைஞ ருடலுகுசெம் புனலூ டாடி
வெண்ணிணமும் பசுந்துளவும் விரவி நாறச்
செம்பருந்து விருந்தாரச் சிறைவண் டார்க்குந்
தெய்வநெடுஞ் சுடர்வடிவாள் சிந்தை செய்வாம். (7)

ஓடுமழை முகிற்கணங்கள் பிணங்கி மேல்போ
யொழிகதிரோ னெழுபரித்தே ருடனே கூடி
யாடுகொடி நெடும்புரிசை மாட வீதி
யணியரங்க மெனையூழி வாழி யென்றே. (8)

ஆற்றாத வமரர்திரண் டைய மென்ன
வஞ்சாத வகையருளி வெஞ்ச மத்தாற்
போற்றாதார் மணிமகுட பந்திப்
பொருதண்டின்...................... (9)

..........................................................................
...............................................................
..........................................................................
............................................................... (10)

வேறு.

வருண மணிநிரைக ளிலக வுலகடைய
மருவு பொறைமகுட சுடிகையா
லருண கிரணரவி தருண வெயிலுமிழு
மரவி னொளியமளி பரவுவாம். (11)

மழை......பனி மலையு மறிகடலும்
வனச வனமென வடிவெலா
முழகு பொழியநதி நடுவு கமலைபுண
ரமலர் துயின்மருவி யருளவே. (12)

அவனி முழுதுநிலை குலையு மெனவருளி
யகல மிருககன வெளியிலோர்
புவன குலகிரிக ளசைய விசையில்வரு
பறவை யரசனடி பரவுவாம். (13)

இறகு கனைகழல்க ளதிர வதிரவெளி
யிடையின் வடவையெரி சொரியநேர்
மறுகில் வருபெரிய கனக நெடுவரையை
வகிரு மொருவனுகிர் வளர்கவே. (14)

வேறு.

ஏனவசுரேசன் மாளவிளையாடு மேவலின்மருத காவல்சூழ்
சேனைமுதனாதர் வேதமொருநாலு தேடுமிருதாள்கள் பாடுவாம். (15)

மாகனகபீட மாளிகைவிடாது மாதுபிரியாது வாழ்வதோர்
கோகனகவாவி நாகணையின்மேவு கோயிலினிதூழி வாழியே. (16)

வேறு.

அருணபங்கயத் தவிசுகண்கருங்
குவளைவெண்பளிங் கனையளென்றலுங்
கருணையும்பெருங் கவிதையுந்தருங்
கலைமடந்தைதன் கழல்வணங்குவாம். (17)

மருதொடிந்துசந் தடிபறிந்துவண்
டலையடர்ந்துதண் டலையடங்கலும்
பொருதெறிந்தெறிந் தெழுதரங்கணம்
புனலரங்கர்வண் புகழ்விளங்கவே. (18)

வேறு.

மலையார்புய மயிடாசுரன் மறவானம ரிடையே
தலையாசன மிடுநாள்பகை தணிவாள்கழல் பணிவாம். (19)

குடர்கோலிய தொடைமாலைகள் புனைகோளரி பிரியா
வடகோபுர மதிதோய்வட மலையோனிலை பெறவே. (20)

வேறு.

திருமகள் விரும்பியுறை திருமார்பு வாழியே
செகமுழு தரும்புமொரு திருநாபி வாழியே
யருமறையி னும்பழைய திருமேனி வாழியே
யழகிய வரங்கர்கழ லிணையூழி வாழியே. (21)

வேறு.

பொருதடுமுதலை வலியா னுவுகூர்
புகர்முகவேழ மொருகான் மூலமே
வருகெனுமளவில் வருவான் வாழியே
வடிவழகுடைய பெருமான் வாழியே. (22)

வேறு.

விளைந்தபோரில் விடாதுமேல் வெகுண்டதானவன் மார்பெலா
மளைந்தகூருகிர் வாழியே யரங்கனுர்கழல் வாழியே. (23)

வேறு.

வளர்ந்ததோள்கள் வாழியே வரம்பிலாழி யேழுபா
ரளந்ததாள்கள் வாழியே யரங்கர்வாழி வாழியே. (24)

வேறு.

வாழிசடகோபன் வாழிபரகாலன் வாழிதமிழ்வேத வாய்மைநூல்
வாழியெதிராசன் வாழிமறைவாணர் வாழியெனையூழி வாழியே. (25)

வேலையலைமீது சோரியலையேற வேடர்படைசாடி மீளுநாள்
சோலைமலைகாவல் பேணிமுனிவாறு தூயமுனிவாழி வாழியே. (26)

ஆதிமறைநூலு மார்பிலணிநூலு மானமனுநூலு மூழிநாண்
மேதினியில்வாழ வேதமுடிசூடும் வீரமுனிவாழி வாழியே. (27)

மாகணையவீசி யானைவிழவோடி வானைகுதிபாயும் வாவிசூழ்
நாகணையின்மேவு தானகுணசீல னுதவராசன் வாழியே. (28)

வேறு.

முறைமுறை யெழிலி பொழிகவே முழுதுயிர் நிலைமை பெறுகவே
நிறைபுனல் பெருகி வருகவே நிலமக ளுணவு தருகவே. (29)

கதிர்வெயி லிரவி மரபில்வாழ் கழல்புனை வளவ னிழல்குலா
மதிபுரை கவிகை நிலவினுன் மலர்தலை யுலகு வளர்கவே. (30)

வேறு.

புவனமோர் கவி...... ......லே பொதியிதழ் முளரியின் முதல்வனு
மவனெழு தினுமெழு தரியபே ரழகுடை யவர்கடை திறமினோ. (31)

எரியவிர் திருநுதல் விழியினு லிலனென வுரைபெறு மதனையே
திரியவு மரசிட வுரியதோர் திருமுக முடையவர் திறமினோ. (32)

வேலென நெடியன கொடியபோர் விழியினு மொழியினு மிடைவிடா
தாலமு மமுதமு மருளுவீ ரணிகிள ருயர்கடை திறமினோ. (33)

வேறு.

புவனமொரு நாலு பிறையுட னுலாவு புகர்கயிலையாடி வருவதோ
ரனையதனி யானை...... ......ரேசன் பரவுமாதர் கடை திறமினோ. (34)

அலைகொள்புனல்வேலை யுலகுபதினாலு
மடைவுகுலையாம லிடையிலே
நிலைகொள்வடமேரு வரையில்விளையாடு
நிகரிலரமாதர் கடைதிறமினோ. (35)

......தருகோல மலர்மகளிர்சேரு மவாருள்பெறாத மகளிர்போ
லிரவுதுயிலாத பரவையவையேழி லினிதுறையுமாதர் கடை திறமினோ.

பருவமலர்மாலை மவுலியகலாத பணமணியவீசும் வெயிலினு
லுருவமொருகோடி யுடை...போது முரசகுலமாதர்கடை திறமினோ. ()

வேறு.

உட்டுருகுமிளைஞருட னுலகடையவிலையெழுதவவரோ
கட்டுவன்மதருபெரியகலசமதர்விழிமகளிர்கடைதிறமினோ. (38)

ஒடியுமிடையொடியுமெனவுபை.........பரிபுரமொலியெழவெழுங்
கடினகனதனகலசமலையநடைபயிலுமவர்கடைதிறமினோ. (39)

சலவியல்புமினிமைதருதவளநகையொடுபொருதுவளரவிழிவேல்
கலவிசெயநினையுமொழிபுலவிசெயுமகளிர்கடைதிறமினோ. (40)

வேறு.

உடலிரண்டுமுட னுருகியொன்றுபட வுரைவரம்பழிய விழியெனுங்
கடலிரண்டருகு கரைபுரண்டுவரு கலவிமங்கையர்க டிறமினோ. (41)

கனவில்வந்ததொரு புலவிகொண்டுவிழி கடைசிவந்தபடி யறிகிலார்
வினவியன்பரவ ரடிவணங்கமிக வெகுளுமங்கையர்க டிறமினோ. (42)

உரைகள்வேறென வுடல்களொன்றென வுறவுசெய்கையி னுணர்வுபோய்
வரைகள்போல்வதிர டோளிலேமிக மயங்குவீர்கடை திறமினோ (43)

வாசமாமலர்கள் மார்புதோயமது மாலைதாழ்குழலில் வண்டெழுந்
தூசலாடவிழி பூசலாடவுற வாடுமாதர்கடை திறமினோ. (44)

ஆளுமேழுலகு காதல்கூரவழ கானமேல்வரு மரங்கர்பொற்
றோளுமாலையும் வணங்கிநின்று... சோருமாதர்கடை திறமினோ. (45)

தேருலாவுமணி மாடவீதிவரு தென்னரங்கரொடு சிந்தைபோ
யூருலாவர மறங்கொள்வேல்விழி யுறங்குமாதர்கடை திறமினோ. (46)

அன்றுபோனதனி நெஞ்சமெ...... ...ரங்கர்பாலணி பலங்கடா
மின்றுபோனவையு நின்றதாமென விரங்குவீர்கடை திறமினோ. (47)

துடையிலேவச மழியவென்று துரங்கவீர ரரங்கனு
ருடையிலேயவர் நடையிலேமன முருகுவீர்கடை திறமினோ. (48)

புலர்ந்தபோது குவிந்தமாலை புணர்ந்தபோது மணங்கொளா
மலர்ந்ததாமரை கொண்டுலாவு மடந்தைமீர்கடை திறமினோ. (49)

பிழையிலேமென வந்தகாதலர் ..........................................
...................................... ......ருந்துவீர்கடை திறமினோ. (50)

வேறு.

அலரும் பகையு மிகநடந்த தந்திமாலை நீங்கியது
புலரும் பொழுது மறந்திருப்பீர் புனைபொற்கபாடந் திறமினோ. (51)

பேணுங் கொழுநர் பிழைகளெல்லாம் பிரிந்து...... நினைந்தவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர் கனபொற் கபாடந் திறமினோ. (52)

பெருமா ளரங்கர் வரைமார்பும் பெரிய தோளு முழுதுடைய
திருமா மடந்தை கழல்பணிவீர் செம்பொற் கபாடந் திறமினோ. (53)

அல்லும் பகலு மடிப்படையா லழிவொன் றில்லா விரணியனைக்
கொல்லும் பெருமாள் கதைபாடக் கோலக் கபாடந் திறமினோ. (54)

*ஆளுங் கொழுநர் வரவுபார்த் தவர்தம் வரவு காணாமற்
றாளு மனமும் புறம்பாகச் சாத்துங் கபாடந் திறமினோ. (55)

கடுத்துச் சிவந்த விறற்பொன்னன் கனகத் தூணி லடித்தகரம்
பிடித்துப் பிளந்த கதைபாடப் பிணைபொற் கபாடந் திறமினோ. (56)

அலையும் புனல்சூ ழரங்கர்படை யடையக் கடந்த வயிலம்புஞ்
சிலையுங் கடந்த திருமுகத்தீர் செம்பொற் கபாடந் திறமினோ. (57)

கேட்டற் கரிய மறைப்பொருளைக் கிளர்பொற் றூணி லொருசிறுவன்
காட்டத் துணிந்த கதைபாடக் கனபொற் கபாடந் திறமினோ. (58)

தாமங் கிடந்த வனமுலையூர் தடக்கை யுகிரா லிரணியனைத்
தாமங் கிடந்த கதைபாடத் தகைபொற் கபாடந் திறமினோ. (59)

அடியிற் பணியா வவுணேச னன்று தொடங்கி யாளரியார்
மடியிற் றுயின்ற கதைபாட மாடக் கபாடந் திறமினோ. (60)

அழல்கண் கனற்ற வெயிறுதொறு மாலஞ் சொரிய வாடல்பயின்
றழல்கங் கணத்தாள் தங்கணத்தோ டுறையுங் காடு பாடுவாம். (61)

வேறு.

அடர்புங்...துடர்சூரை யழல்சுள்ளி விழுவெள்ளி யதர்சேருகாய்
படரிண்டு களவீரை பலவன்னி யெனவின்னல் பலதுன்னுமே. (62)

---

* இச்செய்யுள் கலிங்கத்துப்பரணியிற் காணப்படுகிறது.

முதிர்கள்ளி முரிமுள்ளி முதல்வாகை முதலீகை முட்காலைவேல்
வெதிர்நெல்லி விடதேறு வெட்பாலை யப்பாலை வெளியெங்குமே. (63)

மழைகுன்றி மால்வெந்து பால்வெம்பி மரமொன்று நிழலின்றியே
யிழைகின்ற கழைநின்ற விடமெங்கு மெரிமண்டி யெழுகின்றதே. (64)

மீன்வீழ்வ தெனவந்தி வுலகெங்கும் வெளியாக விழுகின்றதக்
கான்மீது கழைவாடு தழைவெந்து நெடுவானி லெழுகங்குலே. (65)

வேறு.

தீய்ந்துமரங் கரிந்துலறித் திருகுசின வெயில்பருகிச்
சிதைந்து கானங்
காய்ந்தநிறஞ் சிவந்ததெலாங் கடுஞ்சூறை துடர்ந்தெழுந்த
கனலா லன்றே. (66)

பகல்வாழுங் கதிரவனும் பனிமதியும் பலகாலும் பவனி போத
மகல்வான நிறமிருண்ட தந்தவனத் தெழுந்தவனற் புகையா லன்றே.()

வேறு.

தூம வெஞ்சுரத் திடைக ருங்கொடி
துடர நின்றுநின் றுலவு கள்ளிநேர்
தீமை செய்திடுங் கொடிய பேய்களைத்
தேவி வைத்தவெஞ் சிறையை யொத்ததே. (68)

நெறி மயங்கியோர் நீர்மை யன்றியே
நின்ற புன்மைசிக் கென்ற தன்மையால்
வறிய வெஞ்சுரம் பொருள் விரும்பிவாழ்
வஞ்ச மாதரார் நெஞ்சு மொத்ததே. (69)

வேறு.

மண் வெடிக்கவே மழை வரண்டகான்
விண் வெடிக்கவே மெய் வெடிக்குமோ. (70)

(தொடரும்.)

சு. நல்லசிவன்பிள்ளை,
எழுத்தாளர்.